திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி : 3 தொகுதி : 98 மார்ச் 2004

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

பகுதி : 3
தொகுதி : 98
*மார்ச்* 2004

(தோற்றம் 1903) திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1887 - 02.1201911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


இதழ்மணம் 77

திருக்குறளில் இயற்பியல் 79

முனைவர். மெ.மெய்யப்பன்

ஒப்பிலக்கியப் பார்வையில் தொன்மம் 84

தமிழண்ணல்

நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார் 89

முனைவர் சி.சுந்தரி

தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா ? 97

நெற்கர நாடு 105

திரு செ.மா.கணபதி

# இதழ்மணம்

பண்டைத்தமிழ் மக்கள் பேரண்டத்தைப்பற்றிய கருத்துக்களில் பெற்றிருந்த தெளிவு இயற்பியல் அடிப்படையில் "ஆற்றல் அழிவின்மை விதி" என்னும் கட்டுரையில் விளக்கப்படுகிறது. தமிழ் இலக்கியத்தில் திருக்குறள், திருவாசகம் திருவண்டப்பகுதி போன்ற இலக்கியச் செல்வங்களை நுகர்வதற்குப் பேராசிரியர் மெ.மெய்யப்பன் அவர்களுடைய இக்கட்டுரை சிந்தையில் தெளிவை வளர்க்கும்.

முனைவர் மெ.மெய்யப்பன் அவர்கள் இயற்பியல் பார்வையில், கூர்த்த மெய்ஞானத்தால் கொண்டுணர்வார் தங் கருத்தை, அறிவியல் தமிழ்கொண்டு விளக்கும் மெய்யுணர்வாளர்; முன்னைத் தமிழ் விந்தையைச் சிந்தையில் நிற்கும் வண்ணம் விளக்கி எழுதும் கலை வல்லார். பேராசிரியர் மெ.மெய்யப்பன் அவர்களுடைய எழுத்து நின்று நிதானமாகப் பலமுறை படித்து மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டிய உண்மைகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. அதனை உள்வாங்கிக் கொண்டால் திருவாசகம், திருக்குறள், சைவசித்தாந்தம் ஆகியவற்றுள் விளக்கப்பட்டுள்ள மெய்ப்பொருட் செய்திகளின் உள்ளீடு தெளிவுபெறும். தமிழ் மாணவர்கள் தமிழ் இலக்கியங்களை அறிவியல் கருத்துக்களோடு ஒப்பிட்டுப் புரிந்துகொள்வது அறிவியல் பார்வையின் பரப்பை விரிவுபடுத்தும்.

பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் "ஒப்பிலக்கியப் பார்வையில் தொன்மம்" என்னும் கட்டுரை எழுதியுள்ளார். நம்முடைய இலக்கியப் பாரம்பரியத்தில் சங்க இலக்கியம் புராண இலக்கியம் என்ற இருவகைப்பட்ட இலக்கிய வகைகளின் ஆழமும் கவித்துவமும் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. கவிதைக்கும் உரைநடைக்கும் உள்ள வேற்றுமையைச் சுட்டிக்காட்டி என்றும் நிலைத்த கல்விச் செல்வமாக் நம்முடைய இலக்கியங்களும் புராணங்களும் விளங்குகின்ற உண்மையை உளம் கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைக்கிறார்கள்.

தமிழாய்வாளர்கள் கற்கும் நெறியைச் சிந்திக்கத் தூண்டாமல் மக்களை மூளைச்சலவைக்கு ஆளாக்கித் தங்களுக்கு அடிமைகளாக்கிக் கொண்டுவிட்டனர் என்ற செய்தி பின்னும் எண்ணத்தக்கது. ஆழங்கால்பட்ட புலமையும் தமிழ் நெறியும் உடைய பேராசிரியர் கருத்து ஆயிரம்முறை சிந்திக்கத்தக்கது. இக்கட்டுரை இலக்கியங்களை மேலும் மேலும் பயிலும் நெறியைத் தெளிவுறுத்துகிறது.

முனைவர் சி.சுந்தரி அவர்கள் எழுதிய "நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார்" என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. நாடகப் பேராசானுடைய முழுமையான வாழ்வையும் படைப்பையும் கழுகுப் பார்வையில் தீட்டியுள்ளார்கள். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து இப்போது முதுமையுற்றிருக்கின்ற ரசிகப்பெருமக்களுக்கு இக்கட்டுரை இன்பூட்டும் மலரும் நினைவுகளாகும்.

கல்வெட்டுத்துறையில் பயிற்சியுடைய திரு செ.மா.கணபதி அவர்கள் "நெற்சுரநாடு" என்னும் கட்டுரை எழுதியுள்ளார்கள். கழுகுமலைப் பகுதியே நெற்சுரநாடு என்பதையும் அக்காலத்துச் செய்திகளையும் தொகுத்தளித்துள்ளார்கள்.

மொத்தத்தில் இந்த இதழ் நிறையச் செய்திகளைத் தாங்கி அறிவுக்கு விருந்தாக வெளிவருகிறது. பொழுதுபோக்கிற்காக கற்பது என்பது சிந்தனைச் செயல்பாட்டை நசுக்கிவிடும். அறிவார்ந்த நுண்பொருள்களை முயன்று கற்பது நவில்தொறும் இன்பம் பயப்பதாகும்.

செந்தமிழ் காலங்களை வென்று என்றும் எடுத்துப் படிப்பதற்குரிய இதழாக வெளிவருகிறது என்பதைக்கற்கும் அறிஞர் உலகம் அறிந்து போற்றும் என நம்புகிறேன்.

# திருக்குறளில் இயற்பியல்

## 4. ஆற்றல் அழிவின்மை விதி

*முனைவர். மெ.மெய்யப்பன்*

ஆற்றல் அழிவின்மை விதி, இயற்பியலின் அடிப்படையானது; உலகப் பொதுவானதும்கூட. இதன்படி ஆற்றல் அழிவதும் இல்லை; ஆவதும் இல்லை. இதில் நிகழக்கூடியது என்னவென்றால் ஒரு வகையான ஆற்றல் மற்றொரு வகையான ஆற்றலாக மட்டுமே உருமாறுகிறது.

இந்த அடிப்படை உண்மை பேரண்டத்தின் மொத்த ஆற்றல் ஒரு மாறிலியாக இருக்கவேண்டும் என்று தெரிவிக்கின்றது. பேரண்டத்தின் எல்லைகளைச் சரியாக வரையறுக்க முடியாததால், அதன் பருமன், ஆற்றல் எல்லாமே அளவிட முடியாத அளவிற்கு அனந்தமானது என்று கூறுவர். எனினும் ஐன்ஸ்டினின் பொதுச்சார்புக் கொள்கை, வளை வெளி (Curved Space) என்ற நுட்பமான கருத்தால், எல்லையற்ற பேரண்டத்தின் மாயத் தோற்றத்தை ஒரு கட்டுக்குள் கொண்டு வருகின்றது. இதற்குக் காரணம் இயற்பியல் உலகில் எதுவுமே அனந்தமாக இருக்க முடியாது என்பதுதான்.

முதலும் இல்லாது, முடியும் இல்லாது இருந்தால் அதை அனந்தம் எனலாம். அதற்கு மாயத் தோற்றம் தவிர்த்து எந்த மெய்த் தோற்றத்தையும் கற்பிக்க முடியாது ஏறக்குறைய மக்களுடைய எண்ணத்தில் இறைவனின் தோற்றம் இத்தகையதே. ஆனால் இயற்கையினுடைய அகராதியில் அனந்தத்தின் உருவமே வேறுதான். இயற்கை நிகழ்வுகளிலிருந்து அஃது அனந்தத்தை எப்படிக் கற்பிக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

ஒரு வட்டத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு முதலும் இல்லை, முடிவும் இல்லை. ஆனால் ஒரு வட்டத்தை வரையும் போது அதற்கு முதலும் இருந்தது, முடிவும் இருந்தது. முற்றுப் பெற்றபிறகு முடிவில்லாதுபோலத் தோன்றுகின்றது,

அவ்வளவுதான். இயற்கையில் வட்டச் சுற்று முறையில் நிகழும் எல்லா இயற்பியல் நிகழ்வுகளும் முதல் எது, முடிவு எது என்று அறிந்துகொள்ள முடியாத நிலையிலே நடைபெறுகின்றன. சிலர் வேடிக்கையாக 'முட்டையிலிருந்து கோழி வந்ததா? இல்லை கோழியிலிருந்து முட்டை வந்ததா?' என்று கேட்பதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆற்றல் அழிவின்மை விதியின் பட விளக்கம்போல இந்த வட்டச் சுற்றுமுறை இருப்பது குறிப்பிடத்தக்கது. மிக நுட்பமாக ஆராய்ந்தால், ஆற்றல் அழிவின்மை விதிக்கும் வட்டச்சுற்று முறைக்கும் ஒரு தொடர்பு இருப்பதை அறிந்துகொள்ள முடியும்.

சூரியன் உதித்தல், திங்களின் வளர் - தேய் பிறைகள், பூமியின் சுழற்சியால் விளையும் பகல்-இரவு, பருவங்கள், நீர்-நீராவி, மேகம்- மழை, பொருள் - ஆற்றல் - பொருள் மாற்றங்கள், விண்மீன்கள் பிறப்பு-இறப்பு-பிறப்புத் தொடர்கள், இப்படி நுண் பொருள் உலகிலும், பேரியல் பொருள் உலகிலும் பல இயற்கை நிகழ்வுகள் முடிவின்றித் தொடர்ந்து நிகழ வேண்டுமென்றால், அது வட்டச்சுற்று முறையில் நிகழ்ந்தால் மட்டுமே முடியும். மேகம் கடல் நீரை முகந்துசென்று மீண்டும் கடல் மீது பெய்யாது போனால் ஆழ்ந்த, அகன்ற கடலும் தன் தன்மையில் குறைந்துவிடும் என்று கருத்துரைக்குமாறு சொல்லப்பட்ட குறள்,

"நெடுங் கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல்காதாகி விடின்." குறள் : 17

இதில் கடல் நீர், நீராவியாகி, மேகமாகி, மழையாகி மீண்டும் மீண்டும் கடலை வந்து சேரும் என்ற ஒரு நெடிய வட்டச்சுற்று முறை தெரிவிக்கப்பட்டுள்ளது. *தொடர்ந்த மாறுதலுக்கு உள்ளாகக்கூடிய ஒன்று, வட்டச்சுற்று முறைக்கு உட்படாத போது, ஒரு நிலைத்த சமநிலையில் இருக்கமுடியாது என்பதை உணர்ந்த அறிஞர்கள் மட்டுமே இதுபோன்ற கருத்துக்களை முதன் முதலாய் முன்மொழிய முடியும்.*

விண்மீன்களின் ஆக்கமும் அழிவும்கூட ஒரு வட்டச்சுற்று முறையில் நிகழ்வதாக விண்ணியற்பியலார் கூறுவர். அண்டமெல்லாம் பரவி இருக்கும் மெல்லிய வளி மண்டலத்திலுள்ள அணுக்கள் ஈர்ப்பு விசையின் காரணமாக ஒன்றையொன்று கவர ஆரம்பித்து, ஓர் அடர்த்தியான வளிமக் கோளமாக உருவெடுக்கின்றது. துகள்களுக்கிடையேயுள்ள ஈர்ப்பு விசையானது அவைகளுக்கு இடைப்பட்ட தொலைவு குறைவுற அதிகரிக்கின்றது. அதனால் வளிமக்கோளம் மேலும் மேலும் அதன் மையத்தை நோக்கிச் சுருங்க ஆரம்பிக்கின்றது. இச் சுருக்கம் வெப்பமாற்றீடற்ற முறையில் நிகழ்வதால் வளிமக் கோளத்தின் வெப்பநிலை 3000 - 60000K அளவிற்கு உயர்கின்றது. இந்த வெப்பநிலை உயர்வு ஈர்ப்புச் சுருக்கத்தை ஒரு வரம்பிற்கு உட்படுத்துவதோடு வளிமக் கோளத்திலுள்ள, மிக லேசான ஹைட்ரஜன் அணுக்கள் ஹீலியம் அணுக்களாக இணையத்தூண்டுகின்றன. இதை வெப்ப அணுக்கரு வினை என்பர். இதன் விளைவால், ஓரளவு பொருள் சிதைந்து ஆற்றலாக உருமாறுகின்றது. இந்நிலையில் வளிமக்கோளம் ஒரு விண்மீனாகி விடுகின்றது.

உயர் வெப்பநிலை காரணமாக ஏற்படும் வெப்ப அழுத்தம், ஈர்ப்புச் சுருக்கத்திற்கு எதிராகச் செயல்படுவதால், ஒரு சமநிலை ஏற்படுகின்றது. வெப்பநிலைக்கு ஏற்ப கனமான அணுக்களும் இணைவதால், இறுதியில் அதிலுள்ள எல்லா அணுக்களும் நிலைப்புத் தன்மை மிக்க இரும்பு அணுக்களாக மாறுகின்றன. அதன்பின் அற்றல் உற்பத்தி தடைபடுவதால் ஈர்ப்புச் சுருக்கத்தினால் அந்த விண்மீன் சுருங்க ஆரம்பிக்கும். இதை விண்மீனின் ஈர்ப்பழிவு என்பர். இது வெள்ளைக் குள்ளன், நியூட்ரான் விண்மீன், மிகை நோவா, கருந்துரை விண்மீன் எனப் பல படிகளைக் கடந்து இறுதியில் வெடித்துச் சிதறி, மீண்டும் அண்டத்தில் வளிமமாய் பரவுகின்றது. ஓய்வில்லாத அணுக்கள் அங்கு மீண்டும் ஒரு விண்மீனை உருவாக்கும் முயற்சியில் இறங்குகின்றன. இக்கருத்தை மனிதர்களுடைய வாழ்க்கை யோடு பொருத்தி நோக்கினால் தொடர்ந்து நிகழும் உயிரினப் பிறப்பும் ஒரு வட்டச் சுற்று முறையில் தான் இருக்க வேண்டும் என்ற உண்மை புலனாகின்றது. இதைத்தான் பைந்தமிழ்

இலக்கியங்கள் 'மறுபிறபபு' என்று கூறுகின்றன. வள்ளுவப் பெருந்தகைக்கும் இக்கருத்து உடன்பாடே.

பிறப்பு - இறப்பு இவற்றின் இயற்கைத் தன்மையை வள்ளுவர் மிக அழகாக ஒரு குறளில் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்.

"உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" குறள்: 339

இக்குறள் கூறும் கருத்து:

'இறப்பு' எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது. 'பிறப்பு' எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றதாகும். பிறப்பையும், இறப்பையும் மிகவும் இயல்பான தனிச்சிறப்பு ஏதுமில்லாத நிகழ்வுகளாகச் சுட்டிக்காட்டியுள்ளதும், அதை உயிரினங்கள் அனைத்திற்கும் பொதுவாய்க் காட்டியிருப்பதும் இக்கருத்தின் மேன்மையாகும்.

மறுபிறப்பில் வள்ளுவர் கொண்ட நம்பிக்கை பல குறள்களில் வெளிப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள்: 126)

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள்: 398)

"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு" (குறள்: 835)

இதற்கு அறிவியல் கண்ணோட்டத்தில் விளக்கம் அளிக்க முடியும்.

பேரண்டத்தில் 92 வகையான அணுக்களே உண்டு; அணுக்கள் எல்லாம் உயிரற்றவைகள் தாம். ஆனால் அவை ஒன்றையொன்று உணரக்கூடிய தனித்திறமையைப் பெற்றிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட அணு, ஒரு குறிப்பிட்ட அணுவுடன் இணைவதும், ஒரு குறிப்பிட்ட அணுவை விலக்குவதும் இதனால்தான். அணுக்கள் இணைந்தால் மூலக்கூறுகள் ஆகின்றன. அணுக்களின் இவ்வுணர்வே, உயிரியல் மூலக்கூறுகள்

உருவாவதற்குக் காரணமாயிருக்கின்றது. பரிணாம வளர்ச்சிக்கும் இதுவே அடிப்படை ஆகின்றது.

அணுக்களின் சேர்க்கையால், உடலில் உருவாக்கப்படும் மூலக்கூறுகள் அனைத்தும் உயிரியல் மூலக்கூறுகளே. இவற்றின் உணர்திறன், செயல்திறன், குறுகிய கால அளவில், தனி அணுக்களைவிடப் பல மடங்கு அதிகம். இவற்றின் ஒருங்கிணைந்த இயக்கமே உடலுக்கு உயிரூட்டுகின்றது. 'உயிர் பிரிதல்' என்பது இம்மூலக்கூறுகளின் ஒருங்கிணைந்த தொடர் இயக்கம் தடைப்பட்டது என்பதுதான். உயிரற்ற உடம்பில் உயிரியல் மூலக்கூறுகள் செயலிழந்து, உணர்திறனற்ற சாதாரண மூலக்கூறுகள் ஆகிவிடுகின்றன. இம் மூலக்கூறுகள் நிலத்தில் சேர்ந்தும், வளிமண்டலத்தில் கலந்தும், விளைபொருட்களில் படிந்து உணவாக மீண்டும் மனித உடலில் சேர்ந்து, மீண்டும் உயிரியல் மூலக்கூறுகளாக உருமாற முயல்கின்றன. இதுவே மறுபிறப்பு எனப்படுகின்றது.

அணுக்களுக்கு இயற்கையாக அழிவில்லை என்பதால், இந்த மாற்றம் ஒரு வட்டச் சுற்று முறையில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். இதிலிருந்து மறுபிறப்பிற்கு மூலம், 'இறப்பு' என்று தெரிந்துகொள்ள முடிகின்றது.

---

பாவலர், ஆசான் இரா.மோன்குமார் எழுதிய
"உணர்வின் உந்தல்"

என்றும் நூல் வரப்பெற்றோம்.
136 பக்கம்கொண்ட கவிதை நூலின் விலை ரூபாய் 30/-
சத்தியன் பதிப்பகம் வேம்படித்தாளம், சேலம் மாவட்டம்.

# ஒப்பிலக்கியப் பார்வையில் தொன்மம்

*தமிழண்ணல்*

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார்அறி வாரே (343)

என்பது திருமந்திரம். திருமூலர் ஒப்பிலக்கியம் படித்தவர் அல்லர். ஆனால் ஓர் ஒப்பியப் பார்வையை இங்கே சொல்லிவிடுகின்றார்.

## தொன்மம்

தொன்மம் இருவகை. புராணத் தொன்மம்; இலக்கியத் தொன்மம். இலக்கியத்தில் வருவன படிமத் தொன்மங்கள் (Mythical Symbols).

முப்புரம் என்பன அசுரர்கள் தேவர்களை அழிக்க, வானுலகில் கட்டிய பறக்கும் கோட்டைகள். தேவர்கள் அஞ்சி முறையிடவே, சிவபெருமான் 'சிரித்துப் புரமெரித்தார்' என்பது தொன்மம். அவர் சிரித்த அளவிலேயே முப்புரங்களும் எரிந்து சாம்பலாயின.

இக்கதை உணர்த்தும் உண்மைதான் முக்கியமே தவிர, இக் கற்பனை முக்கியமன்று. தொன்மம் என்பது மறைமுகமாக உண்மையை உணர்த்துவது என்பார் ரெனே வெல்லக்கு. பலர் மெய்யியலை விட்டுவிட்டுக் கதைகளை மட்டுமே பற்றிக்கொள்வர்.

இக்கதையில் ஓர் அரிய உண்மை உளது. மனித உயிர்கள் மும்மலமாம் அழுக்குடன் பிறக்கின்றன. நம் உடம்பில் அழுக்கு இயல்பாகச் சார்வதுபோலவும், நம் வீட்டில் தூசிகுப்பை குவிவது போலவும் இம்மலக்குற்றங்கள் பிறவியில் படிகின்றன. ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்பன. இவை ஒருவனை ஆகாயத்தில் பறக்கவைப்பன. ஆணவ மலம் வந்துவிட்டால் ஒருவனிடம் செருக்குச் சேரச்சேர, அவன் வானத்தில் பறப்பதுபோல் மிதப்பான்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது போல, ஓர் உயிர் இறையருளைப் பெறப்பெற, இம் மலங்களாம் இருள் நீங்கிவிடுகின்றது.

எளிதான ஒரு சிரிப்பில், வெற்றி வாய்த்துவிடுகிறது. துன்பம் நாம் சிரித்தால் ஓடிவிடும் என்பது போன்றது இது. 'இவை என்ன செய்யும்' என்னும் பெருமிதத்தோடு, ஒரு சிரிப்புச் சிரிக்குமளவு, பக்குவநிலை எய்தினால், மும்மலங்களாம் கோட்டைகள் தகர்ந்துவிடும்.

'திரிபுரத்தைச்சிரித்து எறித்த விரி சடைக்கடவுள்' என்பது, நம் மும்மலங்களை அழித்தனன் எனும் உண்மையை மெய்யியலை உணர்த்தவே வந்தன.

'முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்' என்றார். கதையைக் கூறிக்கொண்டு, அத்துடன் நிற்பவரை அவர் வெறுக்கும் விதம் இது.

'முப்புர மாவது மும்மல காரியம்' என்பதே உண்மை மெய்யியல். ஆகாயத்தில் பறக்கும் ஆணவக் கோட்டைகளை அழித்ததையே அவை உணர்த்தவந்தன.

இன்றைய ஒப்பியலார் இலக்கியத் தொன்மப் படிமங்களுக்கு, இவ்வாறு உட்பொருள் உண்மைகள் இருப்பதையே கண்டுகொள்ள வேண்டுமென்று பலநூறு பக்கம் விளக்குகின்றனர். திருமூலர், 'முப்புரம் என்பது மும்மல காரியம்' என ஒரே அடியில் அவர்கள் இன்று நிற்குமிடத்திற்கு வந்துவிடுகிறார்.

சிவனை அடிமுடி காணாத கதையும் இராவணன் கயிலயங்கிரியை எடுத்தபோது, தமது இடது கால் பெருவிரலால் அடர்த்து, அழுத்தி, அருள் செய்ததாக வரும் கதையும் இதைப்போல உண்மைகளை உணர்த்தப் படைக்கப்பட்டனவே.

ஆணவம் உயரஉயரப் பறக்கும். யார்க்கும்தானே மேலென எண்ணும் பிரம்மன் அன்னப் பறவையாகி, மேலே பறந்தும் இறைவன் திருமுடியைக் காண இயலவில்லை என்பது, ஆணவத்தால் இறைவனைக் காணுதல் இயலாது என்பதையே

உள்ளீடாக உணர்த்துகிறது. அறிவு அகழ்ந்து அகழ்ந்து ஆராயும், கல்வி - கல் - தோண்டு - தல் என்பதே பொருள். 'தொட்டனைத்து ஊறும் அறிவு' எனும் குறளுக்கு, தோண்டத் தோண்ட அறிவூறும் என்பதல்லவா கருத்து, அதுபோல் இறைவனையும் அறிவாராய்ச்சியால் காண முடியாது. திருமால் பன்றி உருவெடுத்துப் பூமியை அகழ்ந்து சென்றும் இறைவன் திருவடியைக் காண இயலவில்லை என்பது, அறிவால் தேடிக்காண முடியாது என்ற கருத்தையே சொல்லாமற் சொல்கிறது. இறைவன் 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை. உணர்வால் மட்டுமே உணரக்கூடியது இறைமை.

திருநாவுக்கரசர் தாம் பாடிய பதிகந்தோறும் இறுதிப் பாடலில் இராவணன் கதையைக் கூறுவார் இராவணன் தவம் செய்தான். இறைவனிடம் வரம் பெற்றான். அதனால் ஆணவம் தலைக்கேறியது. உலகையே வெல்லலாம் எனத் தன் தேரினைச் செலுத்திப் புறப்பட்டான். இமய மலை எதிர்ப்பட்டது. அதில் கயிலையில் இறைவனும் இறைவியும் உறைகின்றனர். இது தெரிந்திருந்தும், தன் தேர் செல்லத் தடையாக இருந்த, அந்த இமய மலையையே தன் இருபது கைகளாலும் தூக்கி, அப்பால் வைத்துவிட்டுத் தேரைச் செலுத்த எண்ணினான். இறைவன் அவனது ஆணவத்தை அடக்கத் தமது இடதுகாற் பெருவிரலால் சற்றே ஊன்றினான். உடனே அவனது தோள்களும் தலைகளும் நொறுங்க நேரிட்டன. ஆணவம் அடங்கிய இராவணன், தன் கை நரம்புகளையே - பெயர்த்தெடுத்து, யாழ் மீட்டி, சாம வேதகீதம் பாடி மன்னிப்பு வேண்டினான். இறைவன் மன்னித்து, அவனுக்கு நீண்ட ஆயுளையும் வாளினையும் பரிசாகத் தந்தார். இது கதை. இதன் உட்கருத்து என்ன?

அப்பர் தேவாரத்தில் வரும் இறுதிப் பாடல்களில் காணப்படும், இராவணன் பற்றிய குறிப்பு அனைத்தையும் தொகுத்துப் படித்தால் உண்மை விளங்கும். 'போர் அரக்கன் நெடுமுடிகள் பொடியாய் வீழ, அங்கொருதன் திருவிரலால் இறையே ஊன்றி, அடர்த்தவர்க்கே அருள்புரிந்த அடிகள்' என வரும் பகுதிபோல, ஆயிரக்கணக்கில் உள. (ம-32). 'அடர்த்து அருள் செய்தல்' என்பது ஒரு குறியீடு. அஃது ஓர் வினைப்படிமம் (Verbal Symbol)

அடர்த்தல் - தண்டித்தல். தண்டிப்பது அழிப்பதற்கு அன்று. வருந்தித் திருந்தினால், மன்னித்து அருளவும் வேண்டும்.

நாவுக்கரசரின் தன் வரலாற்றுக் குறிப்பு ஒன்று இதில் அடங்கியிருக்கிறது. அவர் தமது 45 அகவை வரை, சமணச் சான்றோராக விளங்கினார். அத் தருமசேனரை, சிவபெருமான், சூலைநோய் என்னும் கொடிய நோயைத் தந்து, தம் வயப்படுத்தினார். அந்த நோய் சமணரால் தீரவில்லை. 'குடரோடு துடக்கி முடக்கியிட' என்பார் அப்பர் பெருமான். அவர் தம் தமக்கையார் திலகவதியாரிடம் வந்து, திருநீறு பெற்று, நோய்தீர்ந்து சிவனியச் செல்வரானார். தம்மை அடர்த்து இறைவன் அருள்செய்ததையே அவர் இவ்வாறு, நன்றிப் பெருக்கோடு, ஒவ்வொரு பதிக இறுதியிலும் அமைத்து - இராவணன் கதையைச் சுட்டுவதன் மூலம் விளக்குகிறார்.

இதை அறிந்தால் நாம் வியப்பிலாழ்வோம். சீவக சிந்தாமணியில், சீவகன் எண்மரை மணந்ததாக வருவதும், இத்தகைய தொன்மப் படிமப் படைப்பேயாகும். சேக்கிழார் பெருமான்; சுந்தரர் வரலாற்றை மட்டும், பெரிய புராணத்தில் 'தடுத்தாட்கொண்ட புராணம்' என மகுடமிட்டிருப்பதும் ஒரு படிமக் காட்சிப் படைப்பேயாகும். இதுகாறும் யாரும் தமிழிலக்கியத்தில் வரும் தொன்மப் படிமங்களைப் படிக்கவில்லை. ஆராயவில்லை. முழுமையாக ஆராய்ந்தால் தான் நமது இலக்கியப் பெருமையை உலகம் அறியும். இல்லாவிடில் இவை வெறும் புராணங்கள், பண்டாரப்பாட்டுக்கள் என்ற அளவில் ஒய்ந்துபோகும். பட்டிமன்றங்கள் யாவும் தமிழை ஒரு பணம் குவிக்கும் வணிகமொழி ஆக்கி விட்டன. பொழுதுபோக்கு மொழி எனும் அளவில் 'கதை' ஆராய்ச்சியோடு நின்றுபோயின. மக்களும் மூளைச்சலவைக்கு ஆட்பட்டு, இவற்றுக்கு அடிமைப்பட்டு, போதையுண்ட பேதைகளாயினர்.

ஒப்பிலக்கியப் பார்வைகள் கணக்கிலடங்கா 'Nearly the infinite field of Comparative Literature' என்ற தொடரை நினைவிற்கொள்க.

ஒப்பியம் - இலக்கணம் என்ன?

"International Perspective and scientific approach" உலகளாவிய பார்வையும் அறிவியல் அணுகுமுறைகளும்.

ஒப்பியத்தின் பயன் யாது?

"To the best understanding of literature and aesthetic pleasure" இலக்கியத்தை நன்கு விளங்கிக்கொள்வதற்கும், முருகியல் இன்பம் பெறுவதற்கும் இது பயன்படும்.

கவிதைக்கும் உரைநடைக்கும் வேறுபாடு யாது?

Myth, Symbol, Image இவை இருந்தால் அது கவிதை; அல்லாதவை உரைகளே. தொன்மம், படிமம், உருக்காட்சி, மூன்றும் இருந்தால் மட்டுமே அது கவிதையாகும். ஒன்றேனும் வேண்டும். அல்லாதவை பாட்டு வடிவிலிருந்தாலும் கவிதைகளாகா.

தமிழ் இலக்கியம் முழுமையும் நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து தோன்றிய இலக்கிய வடிவங்கள்: ஒரு பொருள்மேல் பல அடுக்கி வருதல், குழுப் பாடல்களாக இருத்தல், இசை. ஓசை இனிமையுடைமை, ஆடலுடன் கூடிய தன்மை திரும்ப வரும் கூறுகள் கலி,பரி,வரிப்பாடல்கள், பிசி, முதுமொழி, உரை(கதை) எனப் பலப்பல கூறலாம். உள்ளுறை, இறைச்சி, மெய்ப்பாடு, முன்னம், பயன், எச்சம், தொனி போன்றவை, ஒப்பீட்டு முறையினால் மட்டுமே உலக அரங்கில் புகழ்பெறும்.

தொல்காப்பியர் குறிப்பிடும் 'நோக்கு' எனும் கோட்பாடு, தமிழ் இலக்கியத்திற்கு மட்டுமன்றி, உலக இலக்கியத்திற்கே பொருந்தும்.

ஒப்பியப் பார்வைகளை முதலில் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும். அதற்குக் கோட்பாட்டு நூல்களுடன், இலக்கியத்தில் அவை எவ்வாறு அங்கு ஏற்றிப் பார்க்கப்பட்டன என்பதையும் தேடி ஓரளவு படிக்கவேண்டும். பிறகு தமிழிலக்கியத்துடன் அவற்றை ஒப்பிட்டு நோக்கினால், இக் கோட்பாடுகளை அறியாமலே, தமிழிலக்கியங்கள் முன்பே படைக்கப்பட்டுள்ள நுட்பம் புலனாகும். இவை உலகமொழிகளில் தரப்படும்வரை தமிழிலக்கிய, வான்ளாவிய சிறப்பு, குடத்துள் வைத்த விளக்காகவே இருக்கும்.

# நாடகப் பேராசிரியர் சம்பந்த முதலியார்

*முனைவர் சி.சுந்தரி*

தமிழ்நாட்டில் நாடகக்கலை மிகவும் நலிந்து போயிருக்கின்ற இக்காலகட்டத்தில், நாடகக்கலை சிறந்த நிலை எய்திடப் பாடுபட்ட சான்றோர்களை நினைவு கூர்தல் தேவையான செயலாகும்.

திரைப்படம் நாடகக்கலையின் சேய் என்றே சொல்லவேண்டும். மக்களை மிகவும் கவர்ந்த நாடகங்கள் பல, திரைப்படங்களாக்கப்பட்டன. தொடக்ககாலத் திரைப்படங்களில், நாடகத்தின் தாக்கம் மிகுதியாக இருந்தது. திரைப்பட நடிகர்களில் மிகுதியானவர்கள் நாடகக்கலைஞராயிருந்தவர்களே.

நாடகக்கலைக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு அருந்தொண்டாற்றியவர் மிகப்பலர். அவர்களுள், சங்கரதாஸ் சுவாமிகள், எம்.கந்தசாமி முதலியார், தெ.பொ.கிருஷ்ணசாமி பாவலர், கண்ணையாநாயுடு, நவாப் ராஜமாணிக்கம், பாலாம்பாள் போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள். இவர்கள் நாடகத்தையே தொழிலாகவும் வாழ்க்கையாகவும் கொண்டிருந்தவர்கள்.

ஆனால் நாடகத்தை ஒரு தொழிலாக ஏற்காமல், கலையுணர்வை வெளிப்படுத்த, பொழுதுபோக்குச் சாதனமாய் பயன்படுத்த விரும்பியவர்கள் தனிக்குழு அமைத்துக் கொண்டனர். இம்முயற்சியில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலும் கௌரவமான குடும்பத்தைச் சார்ந்த, படித்த, ஏதேனும் ஒரு துறையில் பணியாற்றி வந்தவர்களாவர். இத்தகைய குழுவினர் பயில்முறை நாடகக்குழுவினர் Amateur trope என்றழைக்கப்பட்டனர்.

பம்மல்சம்பந்த முதலியார் இப்பயில்முறை நாடகக்குழுவின் முன்னோடி ஆவார். இவர் 'சுகுண விலாச சபை' என்ற பயில் முறை நாடகக்குழுவை 1891 ஆம் ஆண்டு தொடங்கி, பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி, அதில் அரசுத்துறையில் பணியாற்றி வந்த பலரைப் பங்கேற்கச் செய்தார்.

சம்பந்த முதலியார், சென்னையில் 1873 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல்நாள், விஜயரங்க முதலியார் - மாணிக்கம்மாளின் மகனாகப் பிறந்தார். சென்னையிலேயே பள்ளிக்கல்வியை முடித்து, மாநிலக் கல்லூரியில் 1893 இல் பி.ஏ., தேர்வில் முதல் வகுப்பில் தேறி, பின்னர் சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞரானார். 1898 ஆம் ஆண்டு உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தொழிலைத் தொடங்கினார். 1924ஆம் ஆண்டு சிறுவழக்கு நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் பொறுப்பேற்றார்.

பல்லாண்டுகள் தொடர்ந்து நாடகங்களை எழுதியும் அரங்கேற்றியும், பயிற்சி கொடுத்தும், நடித்தும் வந்த சம்பந்த முதலியார் 1964 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் இவ்வுலக அரங்கிலிருந்து விடை பெற்றார். தொண்ணூற்றோரு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த சம்பந்த முதலியார் மிகவும்பயனுள்ள வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். தம்முடைய வாழ்நாளில் 1891 முதல் 1958 வரை 94 நாடகங்களை ஆறுபாகங்களாக 'நாடகமேடை நினைவுகள்' என்ற தலைப்பில் எழுதிவைத்துச் சென்றிருப்பது, தமிழ்நாடகமேடை வரலாற்றை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படும் பணி எனக்கொள்ளலாம். அந்நாளைய மேடைக் கலைஞர்கள் யாரும் செய்ய முயலாத செயல் இது எனக்கூறலாம். 'நாடகத்தமிழ்' என்ற தலைப்பில் இவர் எழுதிய மற்றொரு நூலும் நாடக ஆர்வலருக்குப் பெரிதும் பயன்படும் ஒன்று.

சம்பந்த முதலியார் நாடகப்பணியன்றி, பிற சமூக நலப்பணிகளிலும் பங்கேற்றுச் சிறப்புறச் செயலாற்றி யிருக்கின்றார்.

சென்னை அரசு அமைத்த மதுவிலக்குப் பிரச்சாரக் குழுவிற்குத் தலைவராக இருந்து, தமிழ்நாடு முழுவதும் பயணம்மேற்கொண்டு குடியின் தீமைகளை மக்களுக்கு விளக்கமாக எடுத்துரைத்து வந்தார். இச்சங்கத்தில் 64 ஆண்டுகள் பொறுப்பிலிருந்து செயல்பட்டு வந்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் செனட் உறுப்பினராகவும்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார்.

பள்ளிப் பாடநூல் இலக்கியக்கழகத்தில் (School Book Literature Society) பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்து தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்காக உழைத்துள்ளார்.

நாடக நூல்கள் தவிர பொதுவான பல நூல்களையும் எழுதியுள்ளார்.

ஒருவருக்கு ஒரு துறையில் அளவில்லா ஈடுபாடு ஏற்படுவதற்குச் சில அடிப்படைக் காரணங்கள் இருப்பதுண்டு. சிறுவயதில் ஏற்படுகிறசில அனுபவங்களும், பெற்றோரும்கூட இதற்குக் காரணங்களாக அமைவதுண்டு, சம்பந்த முதலியாருக்கு இத்தகைய காரணங்கள் நாடகத்துறையில் ஆர்வம் ஏற்படுவதற்கு உந்துதலாக அமைந்திருப்பதை அறிய முடிகிறது.

இளமைப்பருவத்தில் சம்பந்த முதலியாரின் அன்னை மாணிக்கம்மாள் அவருக்குக்கூறிய புராணக்கதைகளின் வீரம் செறிந்த பாத்திரங்களும், தந்தை விஜயரங்க முதலியார் சேமித்துவைத்திருந்த ஆங்கில நூல்களைப்படித்தறிந்த கதைத்தலைவர்களும் சம்பந்த முதலியாரின் கனவுலக நாயகர்களானார்கள். நாடகம் எழுதுவதற்கு ஓர் உந்துசக்தியாக இது அமைந்தது.

சிறுவயதில் அவர்பார்த்த தெருக்கூத்து நாடகங்களில், நடிகர்களின் நடை, உடை, பாவனை, ஒப்பனை ஆகியவை தமிழ் நாடகங்களின் மீது ஒரு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

சம்பந்த முதலியாரின் பதினெட்டாவது வயதில் பல்லாரியிலிருந்து வந்திருந்த 'சரச வினோதினிசபா' என்ற நாடகக்கூழு சென்னையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடித்துக்காட்டிய நான்கைந்து தெலுங்கு நாடகங்களைப் பார்த்ததால் ஏற்பட்ட தாக்கம், அவரைத் தமிழில் நாடகம் எழுதத் தூண்டியது. இதன் பின்னரே சுகுண விலாச சபையையும் உருவாக்கினார். இச்சபையில், சர்.சி.பி.இராமசாமி அய்யர், தீரர்

சத்தியமூர்த்தி, ஆர்.கே.சண்முகம், சி.துரைச்சாமி அய்யங்கார், வி.சி.கோபாலரத்தினம், ரங்கவடிவேலு போன்ற புகழ்பெற்ற அரசியல் ஈடுபாடு கொண்ட பெரியோர்களும் உறுப்பினராகி நாடகங்களிலும் நடித்துவந்தனர்.

இவ்வாறு படித்து உயர்ந்த பதவியிலிருந்தவர்களும் சமூகத்தில் உயர் நிலையில் இருந்த அறிஞர்களும் இவரது நாடகத்தில் நடிக்க முன்வந்ததால், நாடமேடையின் தரமும் உயர்ந்தது., மக்களிடையே நாடகங்களைப்பற்றிய உயர்வான கருத்தும் உருவாகியது.

நாடக வரலாற்றில் 'சம்பந்த முதலியாரின் காலம்' என்று குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு நாடகத்தொண்டில் ஈடுபட்ட காரணத்தால் அவருக்கு, 'நாடகப் பேராசிரியர்,' 'தமிழ் நாடகத் தந்தை,' 'பத்மபூஷன்' போன்ற பட்டங்கள் தரப்பட்டன.

மிகுந்த கடவுள் பக்திகொண்டவர் சம்பந்த முதலியார் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் அறங்காவலராகத் தொடர்ந்து 24 ஆண்டுகள் பொறுப்பேற்றுச் செயல்பட்டிருக்கிறார். தாம் சென்று தரிசித்த பல சிவன் கோயில்களைப் பற்றிய நூல்கள் எழுதியுள்ளார்.

## சம்பந்த முதலியாரின் பிறநூல்கள்

சம்பந்த முதலியார் தாம் இயற்றிய நாடங்கள் தவிர வேறுபல நூல்களையும் எழுதியுள்ளார்.

நாடகம்தொடர்பாக, 'நாடகமேடை நினைவுகள்' ஆறுபாகங்களும், 'நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?', 'நான் கண்ட நாடகக் கலைஞர்கள்', 'நாடகத்தமிழ்', 'பேசும்பட அனுபவங்கள்', 'தமிழ்ப்பேசும் படக்காட்சி' ஆகிய நூல்களையும், கதை நூல்களாக, 'கதம்பம்', 'பல்வகைப் பூங்கொத்து', 'ஹாஸ்யக்கதைகள்', 'தீட்சிதர்கதைகள்' போன்றவையும்,

கட்டுரைநூல்களாக, 'ஹாஸ்யவியாசங்கள்', சமயம்தொடர்பாக, 'சிவாலயங்கள் - இந்தியாவிலும் அப்பாலும்' ஐந்துபாகங்கள், 'சுப்பிரமணிய ஆலயங்கள்', 'சிவாலயச் சிற்பங்கள்', 'சிவாலய

உற்சவங்கள்' போன்ற நூல்களையும் எழுதிய பல்கலைச் செல்வராகத் திகழ்கிறார்.

## சம்பந்த முதலியாரின் நாடகங்கள்

சம்பந்த முதலியார் எழுதிய 94 நாடகங்களும் மேடையில் நடிக்கப்பட்டவை. சம்பந்தமுதலியுார் முதலில் எழுதிய நாடகம், 'புஷ்பவல்லி' என்ற வரலாற்று நாடகம். இதுவும் மனமோகன நாடகக் குழுவினரின் 'ஸ்திரி சாகசம்' என்ற நாடகத்தின் தழுவல் ஆகும்.

இவர் எழுதிய ஒரே வரலாற்று நாடகம், 'புத்த அவதாரம்' ஆகும்.

சம்பந்த -முதலியார், தாம் கண்ட தெருக்கூத்தாக நடிக்கப்பெற்ற புராண இதிகாச நாடகங்களைப் பல்வேறு மாற்றங்கள் செய்து அரங்கேற்றினார். மகாபாரதக் கதைகளான, 'காலவரிஷி', 'சுபத்திரார்ஜுனா'. 'சகதேவன் சூழ்ச்சி', ஊர்வசியின் சபதம்', 'கொடையாளி கர்ணன்' ஆகிய நாடகங்கள் இத்தகையவாம்.

பிறமொழி நாடகங்களைத் தமிழ் மரபிற்கேற்ப மாற்றி அமைத்துள்ளதைக்காண முடிகிறது. வடமொழி, ஆங்கிலம், பிரஞ்சு, மொழி நாடகங்களை தமிழில் ஆக்கியுள்ளார். வடமொழியிலிருந்து காளிதாசரின் சாகுந்தலம், மாளவிகாக்னி மித்ரம், விக்ரம ஊர்வசி, ஹர்ஷரின் ரத்னாவளி போன்ற நாடகங்களையும் ஆங்கிலத்திலிருந்து,

அமலாதித்தன் - Hamlet<br>
விரும்பியவிதமே - As you like it<br>
சிம்ஹளநாதன் - Cym baline<br>
வாணீபுத்துவணிகன் - Merchant of Venice<br>
மகபதி - Macbeth போன்ற நாடகங்களையும்,

பிரஞ்சு மொழியிலிருந்து,

காளப்பனின் கள்ளத்தனம் - The Knavery of Scalphin

என்ற நாடகத்தையும் தமிழில் தழுவல் நாடகங்களாகக் கொணர்ந்திருந்தார்.

நாடக மாந்தரின் பெயரையும் தமிழில்யாவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் மாற்றியமைத்துள்ளார்.

| | |
|---|---|
| அந்தோனியோ | - அநந்தநாதன் |
| பஸானியோ | - பானுசேனன் |
| ஷைலக் | - ஷியாம்லால் |
| போர்ஷியோ | - சரோஜினி |
| டங்கன் | - தனகராஜன் |

சம்பந்த முதலியாரின் நெருங்கிய நண்பரான வி.வி.சீனிவாச அய்யங்கார், சுகுண விலாசசபையின் உறுப்பினர். நடிகருமாவர். இவர் ஆங்கிலத்தில் எழுதிய ஒன்பது நாடகங்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார் சம்பந்த முதலியார்.

இவருடைய படைப்பில் அவலச் சுவை மிக்க நாடகங்கள் என, 'சிறுத்தொண்டர்', 'கள்வர்தலைவன்', 'நல்லதங்காள்', 'விஜயரங்கம்' ஆகியவற்றைக் கூறலாம்.

தொடக்க காலத்தில் சம்பந்த முதலியார், பண்டைய நாடக முறையைத் தழுவி, புராண, இதிகாச நாடகங்களை எழுதி, பாட்டுக்களுடன் தம்முடைய நாடகங்களை அரங்கேற்றினார். பின்னர், சமூக நாடகங்களை ஆக்கி, குறைந்த அளவு நேரத்திலேயே நாடகத்தை முடித்து, பார்வையாளர்களை மறு நாள் தங்களுடைய அலுவல்களில் இடையூறின்றி ஈடுபடும் வகையில் செயல்பட்டுவந்தார்.

சம்பந்தமுதலியார் எழுதி அரங்கேற்றிய முதல் சமூக நாடகம் 'பொன்விலங்குகள்' ஆகும். இந்நாடகத்தில் கதைத்தலைவி பங்கஜவல்லிபாடும் ஒருவிருத்தம் தவிர வேறுபாடல்களே கிடையாது.

இவருடைய 'பிராம்மணனும் சூத்திரனும்' என்னும் நாடகம் சாதிபேதம் நீங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்ட தாயினும், மிகுந்த விவாதத்திற்கு ஆளானதால் பிறகு மேடை யேற்றப்படவில்லை.

சம்பந்த முதலியாரின் நாடகச் சீர்திருத்தம் அந்நாளில் பெரிதும் வரவேற்கப்பட்டது. சரியான நேரத்திற்கு நாடகத்தைத்

தொடங்கியதும், சமூக நாடகங்களில் பாட்டுக்களைக் குறைத்ததும், பிறகு பாட்டுக்களைத் தவித்ததும் மக்களால் வரவேற்கப்பட்டன.

பெண்கள் நாடகங்களைப் பார்க்கக்கூடாது என்றநிலையை மாற்றி, நாடகக்கலையின் மீதும் நடிகர்கள் மீதும் ஒரு மதிப்பு ஏற்படச்செய்து, நாடக அரங்கிற்கு மிகுந்த அளவில் குடும்பப் பெண்கள் வந்து காணும் நிலையை உருவாக்கினார்.

நாடக நடிகர்கள் என்றால் கூத்தாடிகள், ஒழுக்கமில்லாதவர்கள் என்ற எண்ணத்தை மாற்றி, நடிகர்களுக்கு ஒழுக்கம் இன்றியமையாதது என்ற உணர்வை ஏற்படுத்தினார். இவருடைய நாடகக் குழுவில் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, பலதுறைகளில் பணியாற்றும் ஆடவரே மிகுதியாக நடித்து வந்தனர். இருப்பினும் பெண்கள் அமெச்சூர் நாடகங்களில் நடிப்பது என்பது இவர் காலத்திலும் கை கூடாத செயலாகவே இருந்தது. எனவே இவர் நாடகங்களில் பெண் வேடமேற்று ஆண்களே நடித்துவந்தனர்.

சம்பந்தமுதலியார் தம் நாடகங்களில் பெண் வேடமிட்டவர்களில் ரங்கவடிவேலு, கே.நாகரத்தினம், டி.சுந்தரிவரத ஐயங்கார் ஆகியோரைச் சிறந்த நடிகர்களாகக் குறிப்பிடுகிறார்.

இவருடைய சமூக நாடகங்களில் படைத்துக் காட்டப்பட்ட பெண்கள் ஒழுக்கம் நிறைந்த குலமகளாகவே காட்டப் பட்டுள்ளனர். அதேவேளையில், பெண்பாத்திரங்கள் எண்ணிக்கையில் குறைவாகவும், பாத்திரங்கள் தோன்றும் காட்சிகளைக் குறைத்தும் படைத்துள்ளதைக் காணமுடிகிறது.

சுதந்திரப் போராட்ட காலத்தில் வாழ்ந்தவராயினும் சம்பந்த முதலியார் தம் நாடகத்தில் பெண்கள் போராட்டத்தில் ஈடுபடுபவர்களாகவோ, புரட்சி செய்பவர்களாகவோ படைத்துக் காட்டவில்லை.

அத்தோடு, அவர் ஆங்கிலேயரின் ஆட்சியையும் எதிர்த்தவரில்லை, ஆங்கிலேயர் அளித்த 'ராவ்பகதூர்'

பட்டத்தைத் தம் பெயருக்கு முன்னால் சேர்த்தே எழுதிவந்தார்.

ஆயினும் சம்பந்தமுதலியார் காலத்தை ஒரு சகாப்தம் என்றே தமிழ் நாடக வரலாற்றில் குறிப்பிட வேண்டும். நீண்ட காலமாக நாடகத்துறையில் இடைவிடாது ஆற்றிவந்த பணி, அவருக்கு இப்பெருமையை அளிக்கிறது. நாடகக்கலையில் காலம், ஒப்பனை, காட்சியமைப்பு, அணிகள், உத்திகள், மேலை நாட்டு நாடகங்களைப் பின்பற்றிய கதை, பாத்திர அமைப்பு ஆகியவற்றில் அவர் காட்டிய கருத்தும் கவனமும் மற்ற நாடகக் குழுவினரும் பின்பற்றக்கூடியதாய் இருந்தன.

சம்பந்த முதலியார் ஒரு நாடக ஆசிரியராய், இயக்குனராய், நடிகராய், நாடக அமைப்பாளராய் பல பொறுப்புக்களையும் ஏற்று தம்மை முழுவதுமாய் நாடகக் கலைக்கு அர்ப்பணித்துக் கொண்டது அவர் நாடக உலகில் ஒரு துருவநட்சத்திரமாய்த் திகழவழி வகுத்தது.

அத்துடன், தம் காலத்து நாடகங்களையும் நாடக நிகழ்வுகளையும் அச்சிட்டு நூல் வடிவில் வெளியிட்டது, இன்றும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு ஓர் அரிய கருவூலமாய் பயன்படுகிறது. 'அவருடைய நாடகமேடை நினைவுகள்' நாடக ஆர்வலருக்குப் பயன்படும் சான்றாதாரங்கள் எனலாம். கடந்தகாலத்தில் தமிழ் நாடகங்களைப்பற்றி இலக்கிய வரலாற்றில் குறிப்பிடப்படும் செய்திகள் ஆவணங்கள் அடிப்படையில் அமைவன அல்ல. தக்க சான்றுகள் கிடையாது. இதுபோன்று தமிழ்க் கலைகள் பலவற்றிற்கும் சான்றாதாரங்கள் கிடையாது. அப்படிப்பட்ட சூழலில், தம் காலத்து நாடகச் செய்திகள் அனைத்தையும் இயன்றளவு தொகுத்துத் தந்திருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.

சம்பந்தமுதலியாரின் பல நாடகங்கள் பின்னர்த் திரைப்படமாகவும் ஆகியிருக்கின்றன.

லீலாவதி சுலோசனா, தாசிப்பெண். ஊர்வசியின் சாபம், காலவரிஷி, ரத்னாவளி, வேதாள உலகம், சபாபதி முதலியன திரைப்படங்களாக வந்துள்ளன.

# தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா?

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

இனி, வள்ளுவனார் தம் நூலை அறம் பொருளின்பமென மூன்றுறுப்படக்கியபிண்டமாய்க் கூறியதன்றி, வீடுகூறிற்றில ரெனக் கடாவொன்றெழுப்பினாரு முளராலெனின்;- அற்றன்று; அறத்தை யில்லறந்துறவறமெனப் பகுத்தெடுத்துப் பின்னையதான துறவறத்தில் வீடுபேறெய்தற்காம் நன்னெறி கடைப்பிடித்து இனிது விளக்கினாராகலின் வீடுகூறினாரென்றே துணிக. துறவறத்தின்வேறாகக் கூறப்படும் வீடுபேற்றின் பிறிதின்மையின் இஃது அதனினடங்குமாறு வாய்வதேயாம் என்க. இது தெரித்தற்கன்றே நக்கீரனார் தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்-ஆனாவறமுதலா வந்நான்கு- மேனோருக், கூழினுரைத்தாருக்கு எனவும் மாமூலனார் அறம்பொரு ளின்பம்வீடென்னுமந்த நான்கின், றிறந்தெரிந்து செப்பிய தேவை எனவும், நரிவெரூத்தலையனார் இன்பம் பொருளறம் வீடென்னுமிந்நான்கு, முன்பறியச் சொன்ன முழுமொழிநூல் எனவும், கொடிஞாழன்மாணிபூதனார்,

அறனறிந்தேமான்றபொருளறிந்தேமின்பின்
றிறனறிந்தேம்வீடுதெளிந்தேம் - மறனெறிந்த
வாளார்நெடுமாறவள்ளுவனார்தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு

எனவுங் கிளந்துரைத்துப் பாயிரஞ்செய்திட்டார். இவையிங் ஙனமாகவும் பரிமேலழகரையுள்ளிட்டோரெல்லாம், வீடுபேற்றின்பம் இத்துணைத்து, இத்தன்மைத்தென ஒருவாற்றானும் உரைக்கப்படாமையினஃதொழித்து ஏனை மூன்றுமே நூல்களுட்சொல்லப்படுமென்று தத்தமக்குத் தோன்றியவாறே கூறுப. அஃது அங்ஙனமாயின் அன்பினைந் திணையொழுக்கம் பற்றிவரும் இன்பமும், யாண்டும் நுகர்வோர் தமக்கேபுலனாவதல்லது, பிறர்க்கு இவ்வியல்பிற் றென

விளக்கங்காட்டுதல் ஏலாமையின் அதுவும் நூல்களாற்கூறப் படாவெனல்வேண்டுமென்றே. அது பொருந்தாமையாற் பேரின்பவுருவினதாம் வீடுபேற்றின்பம் உரைக்கவுங் கருதவுமாகாமை பற்றி அதனை எய்தற்காந்தரங்கூறுதல் நூல்களிடத்தில்லையா யிற்றென்றல் பொருந்தாதென ஒதுக்குக. திருவள்ளுவனார் குறளில் மெய்யுணர்தலென்னும் அதிகாரத்தில் ஒருவன் தத்துவஞானந்தலைப்படுமாறும் அது தன்னால் வீட்டுநெறி தலைக்கூடுமாறும் நன்கு வகுத்துக் கூறுதலின் மேற்கடாவெழுப்பி நெகிழ்ந்து சேறல் என்கொலொவென்பது.

பின்னும், பிள்ளையவர்கள், கம்பர் இராமாயணத்து,

தேவர் பாடையிலிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னாருரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னாலிது ணர்த்திய பண்பரோ

எனவரும் நூல் வரலாற்றுச் செய்யுளானும் வடநூற்பொருள் பற்றித் தமிழ் நூல்கள் நடக்குமென்பது விளங்குகின்றதென்கின்றார்கள். அதுவும் ஒல்லாமைகாட்டுதும். இராமயாணம் பாரதமே போலப் பாரம்பரியமான கதையமைந்து வரும் இதிகாசங்களுள் ஒன்று. இதிகாசம் என்பது, அற முதலிய நான்குபொருள்களையும், திறம்பட விரித்துப் பழங்கதைகளுடன் சேர்த்து அறிவிக்கும் நூலாம். பாரம்பரியமான கதையமைந்து நடப்பனவற்றை வடநூலார் இதிகாசமென்பர். இதி-ஹ-ஆஸ=இதிகாஸ, அப்படியிருந்தது என்பது பொருள். பிள்ளையவர்கள் தமக்குப் பற்றுக்கோடாக எடுத்துக் கொண்ட செய்யுளான் விளங்குவதியாதெனின், நன் தமிழ்ப்பாவினாலதனையுணர்த்தத் தொடங்கிய பண்பு தேவர் பாடையில் இக்கதை செய்தவர் மூவரெனப்பட்டார் அவர் தம்முள்ளும் முந்திய நாவலராகிய வான்மீகி முனிவருடைய நூலின்படியேயாமென்பது என்க. தேவர்பாடை-ஸம்ஸ்கிருதம்; மூவர்-வான்மீகி, போதாயனர், வியாதர். கம்பநாடர் வடமொழிக்கணிருந்து படியெடுத்துச் செய்தாராதலின் வடமொழியிலுள்ள இராமயணங்கள் பலவுள்ளும் முதன்மை பெற்ற வான்மீகி இராமயாணத்தைப்

படியெடுத்துக் காதைகள் முறைபிறழாமற் செய்தார் என இது மட்டுமே பலப்படுகின்றது; அன்றி, வடநூன்மரபு பற்றித் தமிழின்கண் நூலியற்றினாரென்பது யாண்டும் பெறப்படாமை காண்க? வடநூன்முறையும் தமிழ் நூன்முறையும் முன்னரேயுரைத்து வைத்தாம். ஆண்டுக்காண்க.

நான்காவதாகப் பிள்ளையவர்கள் காட்டுவது, அகத்தியந் தொல்காப்பியமென்னுந் தமிழிலக்கணங்கட்குப் பாணினீயமும் ஐந்திரமும் முதனூல்களாமென்னும் பிரயோகவிவேக நூலார் கூற்று. குருகூர்ச் சுப்பிரமணிய தீட்சிதரையு மவர் கூட்டத்தாரையும் அவர்க்கு வடமொழிக்கண் மட்டுமுள்ள அபிமான முதலியவற்றையும் கருதாது பிள்ளையவர்கள் கூறியவற்றையு மொருசிறி தாராய்ந்து செல்வாம்.

இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றன னென அகத்தியத்தின் கண்ணும், ஐந்திர நிறைந்த தொல்காப்பிய னெனத் தொல்காப்பியப் பாயிரத்தின்கண்ணும் ஒரோவொரு பொருள் பற்றி வந்தமைகொண்டு, தமிழ்நூற்கு முதனூல் பாணினீயமும் ஐந்திரமுமா மென்றார். சுப்பிரமணியதேசிகர். அவை யங்ஙனமாகாமை தெளிவுபெறக்காட்டிய பின்னூலாரையும் அமுதவாயுடையரான நச்சினார்க்கினியா ரையுள்ளிட்ட உரையாசிரியன்மாரையும், தமக்கு வேண்டியவாறோதினார்.

அகத்தியந் தொல்காப்பியம் முதலிய செழுந்தமிழ்நூல்கட்குப் பாணினீயம் ஐந்திரம் முதலான வடமொழி வியாகரணங்களை முதனூல்கள் என்றல் சிறிது மிசையாத பொய்யுரைகளாமெனத் திரிவுகாட்டி மறுத்து, அகத்தியந் தமிழ்க்கு முதனூலாமென மாபாடியகருத்தாவான மாதவச் சிவஞானயோகிகள் தமது தொல்காப்பியச் சூத்திரவிருத்தியின் கண்ணே நிறுத்தியிருக்கின்றார்கள். ஆண்டுக் கண்டு தெளிக.

இனி, பாணினீய முதலிய வடமொழிவியாகரணங்கட்குத் தொல்காப்பியம் முற்பட்டுள்ளதென்பதும், அதுவே சரித்திர நூல்வல்லாரெல்லார்க்கு மொப்பமுடிந்ததென்பதுஞ் சிறிதுகாட்டிச் செல்வாம்.

தொல்காப்பியமென்னும் நூல், வடமொழியிற் பாணினி முனிவரியற்றிய அட்டாத்தியாயியென்னு மரியபெரிய விலக்கண நூலுக்கும் முற்பட்டுள்ளதென்பது நாட்டவே யிதன்காலந் தமிழ்நூல்களுக்கெல்லாம் முற்பட்டதாதலும் நன்குபெறப்படும். ஆதலிற் பாணினிமுனிவர் காலம் ஈண்டுச் சுருங்கவகுப்பாம். பாணினிமுனிவர் தாமியற்றிய இலக்கண நூலில் இந்தியதேசத்தின்கணுள்ள இடங்கள் பலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றின் பெயர்களுக்கெல்லா மிலக்கணம் வகுத்துரைத் திருக்கின்றார். பெரிது மவராற்குறிக்கப்பட்ட நாடுநகரங் களெல்லாம் பஞ்சாப் தேயத்திலும் ஆப்கானிஸ்தானத் திலுமிருக்கின்றன. இந்தியாவின் தெற்குப்பிரதேசங்களில் அவராற்குறிக்கப்பட்ட இடங்கள் கச்ச, அவந்தி, கோசல, கருச, கலிங்க முதலியனவாம். இவையெல்லாம் விந்தியமலைக்கு வடக்கேயுள்ளன. விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள நாடுநகரங்களி லொன்றேனும் அவராற் குறிக்கப்பட்டதில்லை. ஆகவே, பாணினிமுனிவர்காலத்து ஆரியர் விந்தியமலைக்கு வடக்கேயுள்ள நாடுகளில் இருந்தாரென்பதும் அதனைக் கடந்து இப்பால் வந்திலரென்பதும் இனிது பெறப்படுவனவாம்.

இனிப் பாணினீயத்திற்கு வார்த்திகவுரையெழுதிய காத்தியாயனர் விந்தியமலைக்குத்தெற்கேயுள்ள நாடுநகரங்களைக் குறிப்பிடுகின்றார். ஓரிடத்தின் பெயர் பற்றியவிடத்திற் பிறந்த மக்கட்குப் பெயர் வருமாற்றைச் சுட்டிப் பாணினி முனிவர் விதிகூறிப் பாஞ்சாலத்திற்றோன்றியோன் பாஞ்சாலன் சால்வத்திலுதித்தோன் சால்வேயன் என்பனவாக உதாரணமுங் காட்டியுள்ளார். ஈண்டு இச்சூத்திரத்திலே வேறுசிலவிடப்பட்டன வென்றுரைத்துக் காத்தியாயனர் பாண்டியன் என்னுஞ் சொல் பாணினியாற் சொல்லப்படவில்லை; பாண்டுகுடியில் அல்லது பாண்டிநாட்டிற் பிறந்தோன் பாண்டியனெனப்படுவா னென்று புதியதோர் உரையுஞ் சேர்த்தெழுதினார். இன்னு மிவ்வாறே சோழர் மிகீஷ்மத் எனப் பிறவும் அக்காத்தியாயனரால் ஆராய்ந்துரைக்கப்பட்டன.

இனிப் பாணினீயத்திற்கு மாபாடியமுரைத்த பதஞ்சலியார் மகீஷ்மதி, வைதர்ப்ப, காஞ்சீபுர, கேரள என்பன

பிறவற்றையுமாராய்ந்துரைத்தார். அதுவேயுமன்றித் தம்முரையுட் காத்தியாயனர். வார்த்திகவுரையிற் பாடபேதங்கள் பலவுளவாதலுமெடுத்துக் காட்டினார்.

காத்தியாயனருரை பலபாடபேதங்களுடையத்தாய்த் திரிபெய்தற்குப் பல நூற்றாண்டுகள் செல்லுமாகலின், அப்பாடபேதங்களைத் தம்முரையுட் குறித்த ஆசிரியர் பதஞ்சலியார்க்கு அக்காத்தியாயனர் சிலநூறுவருடங்களின் முன்னே யிருந்தாராகற்பாலார். மற்றுப் பதஞ்சலியார் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐம்பத்தாறு வருடங்களின் முன்னிருந்தாரெரன வடநூற்சரித்திர பண்டிதர்கள் நிறுவினராகலின் அக்காத்தியாயனர் காலம் இரண்டாயிரத்து முந்நூற்று ஐம்பது வருடங்களின் முற்பட்டதென்பது பெற்றாம்.

இனிப் பாணினி முனிவராற் சொல்லப்படாத புதிய இலக்கண விதிகள் காத்தியாயனராற் சொல்லப்பட்டிருப்பதுகொண்டு அவ்விதிகள் பெறுதற்குரிய சில சொல்வழக்குகள் பாணினி முனிவர் காலத்தில் இல்லையென்பதூஉம் பெறப்படுகின்றன. அதுவேயுமன்றிப் பாணினி முனிவர்காலத்து நடைபெற்ற சொற்கள் பல, காத்தியாயனர்காலத்து வழக்குவீழ்ந்தொழிந்தன. இங்ஙனம் ஒருமொழி திரிபெய்துதற்குப் பலநூற்றாண்டுகள் செல்லுமாகலின், பாணினி முனிவர்க்கும் காத்தியாயனர்க்கும் இடையில் விரிந்தகாலம் நானூறு வருடத்திற்குக் குறையாதாதல் தகுதிப்பாடுடைத்தாம். எனவே, பாணினி முனிவர் இற்றைக்கு இரண்டாயிரத்து எண்ணூறு வருடங்கட்கு முன்னிருந்தனரென்பது பெறப்படும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் சொல்லதிகாரத்தில் தமிழ்ச்சொல்லி லக்கணங்களெல்லாம் முற்றவுங்கூறாராயினும் அச்சொற்க ளெவ்வாறு பிறந்தனவென்று ஆராய்ந்து அவை தம்மையெல்லாம் பகுத்துப் பகுதிகளாக அடக்கிக் காட்டினாரில்லை. அங்ஙனமாயினும், ஒவ்வொரு சொல்லுங்காரணம் பற்றியே தோன்றினவென்னும், அக்காரணமறிவுடையார்க்கன்றி மற்றையோருக்கு விளங்கித் தோன்றாவென்றும் குறிப்பிட்டு மொழிப்பொருட்காரணம் விழிப்பத்தோன்றா எனச் சூத்திரித்தார்.

இவ்வாறு வருவனவற்றாற் றமிழ்ச்சொற்களைப் பகுதி விகுதி முதலியனவாகப் பகுத்து ஆராய்ந்துரைக்கும் நெறி தொல்காப்பியனார் நூலெழுதியஞான்று தமிழாசிரியர்க்குத் தெரியாதிருந்ததென்றே கருதப்படும்.

மற்றுப் பாணினிமுனிவர் தாமியற்றிய அட்டாத்தியாயியில் தங்காலத்து வழங்கிய பல்லாயிரமாரியமொழிகளையெல்லாம் பகுதி விகுதி முதலியவாகப் பகுத்தாராய்ந்து அவற்றையெல்லாம் தாதுபாதத்திற் சில்லாயிரம் பகுதிகளிலே யடக்கியுள்ளார். தொல்காப்பியனார் பாணினி முனிவர்காலத்திலேனும் அல்லது அதற்குப் பின்னாயினும் இருந்தனராயின் இலக்கண வாராய்ச்சிக்கு இன்றியமையாப் பெருஞ்சிறப்பினதான சொல்வரலாற்றுமுறையைத்தவறாது கூறியிருப்பர்.

பாணினி முனிவருக்கு மிகவும் பிற்பட்டவரான பவணந்தியார் இச்சொல்வரலாற்று முறையைத் தமது நன்னூலிற் றழுவிக் கூறினமையறிய வல்லுநர்க்கு யாமுரைத்தது மிகவும் பொருத்தமுடைத்தாதல் தெற்றென விளங்கும். ஆகவே சொல்வரலாற்று முறை தெரிந்துரைத்த பாணினி முனிவர்க்கும் அம்முறை தங்காலத்திலில்லாமையால் அதனையுரையாது விடுத்த தொல்காப்பியமுனிவனார்க்கும் இடையே பட்ட காலஞ் சாலப்பெரிதாதல் வேண்டும்: பாணினி முனிவனார்க்கும் நானூறு வருடங்களின் முன்னே ஆசிரியர் தொல்காப்பியனார் இருந்தனரெனக்கொள்ளும் வழி இற்றைக்கு மூவாயிரத்திருநூறு வருடங்கட்கு முன் அவர்காலங் கணிக்கப்படுமென்று கொள்க.

நிற்க; மற்றுமோராற்றல், தொல்காப்பியனார் காலமாயும் வழி அது நாலாயிரவருடங்கட்கு முற்பட்டதென்பது நாட்டப்படும். தொல்காப்பியம் பஃறுளியாறு கடல்கொள்ளப்படுமுன் னெழுதப்பட்டது. அக் காலத்தே குமரியாறு தென்றிசையி லோடிக் கொண்டிருந்தது. இது வடவேங்கடந் தென்குமரியாயிடை எனவரும் பனம்பாரனார் பாயிரவுரையானும், அதற்குரைகண்ட இளம்பூரணர் முதலான உரையாசிரியாருரையாலும் நன்குணரப்படும். இவ்யாறுகளுமிவற்றைச் சூழ்ந்த நிலங்களும் கடல் கொள்ளப்பட்டது. இற்றைக்கு நாலாயிரத்து முந்நூறு வருடங்களின் முன்னென்பது, இலங்கைப் பௌத்த

வம்சாவளியிலே குறிக்கப்பட்டிருக்கின்றது. இங்ஙனம் குறிக்கப்பட்ட காலமும் விவிலிய நூலிலே குறிக்கப்பட்ட நோவாவென்பவர் காலமும் மிகவும் ஒத்தியல்கின்றன. எனவே தொல்காப்பியனார் நாலாயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்னிருந்தாரென்பது பல்லாற்றானும் இனிது பெறப்பட்டது.

இதுகாறுங் கூறியவற்றாற் றொல்காப்பியம் பாணினீய வடநூற்கு முற்பட்டுள்ளதென்பது விளக்கப்பட்டது. இங்ஙனமும் பிறவு மெல்லாமிருப்பவு, அவற்றினுண்மை பொருட்செறிவென்றிவை ஒருசிலவும் நோக்காது, தொல்காப்பியத் தெய்வச் செழுந்தமிழ்நூற்குப் பாணினீய முதலிய வடநூல்களை முதனூலாமென்பது, எங்ஙனம் பொருந்துமென்பது.

இனியிறுதியாக, தமிழ்நூற்கடல், வடமொழிக்கடல் என்றிவற்றை நிலை கண்டுணர்ந்த மாதவச் சிவஞானயோகிகள் வடநூலுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்புவிளங்கா தென ஒன்றுபற்றி யொரோவிடத்துக் கூறியது கொண்டு பிள்ளையவர்கள் வடநூல்வழீஇயது தமிழ் நூலெனக் குறித்தார்கள், சொல்லியைபுநோக்காமையால். வடநூலுணர்ச்சியுஞ் சாலப்பெற்றார்க்கும், ஏனை மொழிப்பயற்சிகைவந்தார்க்கும் மட்டுமே தமிழ் நூற்றிட்பம் பெரிதும் புலப்படும் என்பது குறித்தே யோகிகளங்கனமுரைக்கலானர்கள்.

தொல்காப்பியனார்க்கு ஏனைய மொழிப் பயில்வும் உண்மையானன்றே தமிழிலக்கணம் வகுக்கும்போதெல்லாம் அதன்மாட்டு மட்டுமே கிடக்கின்ற விழுப்பமெல்லாங்கண்டு வேண்டுமிடந்தோறும் அதன்பெருமைகளைக் குறிப்பானும் வெளிப்படையானு மெடுத்துரைப்பாராயினர். அகத்திணை, புறத்திணை இவற்றை நோக்குக. இவைபோல்வன பிறவற்றையும் நன்கு தெரித்தற்கன்றே பாயிரஞ்செய்திட்ட பனம்பாரனாரும் ஐந்திரநிறைந்த தொல்காப்பிய னெனவுங் குறித்திட்டார். பாணினீயம் முதலிய வடமொழி வியாகரணங்களுக்கில்லாத சிறப்புத் தமிழிற்குப் பெரிதும் உண்டென்பது வடமொழியுந் தமிழ்மொழியுமொருங்குதேறிணார்க்கன்றி யேனையோருக்கு எங்ஙனம் புலப்படும். வடமொழியின் கண்ணே குறியீடுகள் பல காரணமின்றியும் வந்தன. தமிழின் கண்ணையே காரணம்

பற்றாக்குறியீடுகள் ஒரு சிறிது மில்லையென்க. இதனை வடநூற்புலமையும், தமிழ்நூலறிவும் ஒருங்குவிளங்கப்பெற்ற தனானன்றே சிவஞானபோகிகளும், தமது முதற்சூத்திர விருத்தியின் கண்ணே ஆசிரியர் (தொல்காப்பியனார்) யாதானுமோர் காரணம் பற்றியே குயிட்டாளுவதல்லது வடநூலார்போலக் காரணம் பற்றாதும் குறியிட்டாளுதல் யாண்டுமில்லையெனத் தெரித்தார்கள். ஆதலான், தெய்வச் செந்தமிழ்த்தொன்மையும், பெருமையும் உணர்ந்து இன்பமுறல் வேண்டுவார்க்கு வடமொழிப்பயில்வும் வேண்டப்படுவ தொருதலையாம்.

அன்றி, உலகியற்பொருளறிவும் பிறவும் கைவந்தவர்க்குத் தமிழ் நூலுணர்வொன்றுமே போதாது, வடநூலுணர்வும் வேண்டப்படும் என்பது சிவஞானயோகிகளுக்குங் கருத்தாகும் எனப்பிள்ளையவர்கள் உள்ளுதல், பெரியதோர் ஏதமாம் என்க. அதனை யோகிகள் இயற்றிய நூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இது கிடக்க; வடமொழிக்கணில்லாத பலவியல்களும், பொருள்வனப்பும், செந்நடையும் நஞ்செந்தமிழிற் காணப்படுதலையாவரே யறியார். அன்றியும், தமிழின்கண் தோன்றல், திரிதல், கெடுதன் முதலிய புணர்ச்சிச் செய்கைகளும், குறியீடுகளும்; வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சொல்லிலக்கணங்கள் சிலவும்; உயர்திணை, அஃறிணை, ஐம்பால் என வருஞ்சொற்பாகுபாடுகளும்; அகம், புறம் எனவரும் பொருட்குறி வகைகளும், அவற்றின் பகுதிகளாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை, வெட்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை யென்பனவும், அவற்றின் றுறைகளும், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்பனவும், அவற்றின் இனங்களும் இன்னோரன்னபிறவும் வடமொழிக்கண் இன்மையான் அவையெல்லா மெவற்றினின்றுந்

இங்ஙனம்
வவுனியாவிலிருந்து
சு.இராஜையனார்
யாழ்ப்பாணத்து நல்லூர்

# நெற்சுர நாடு

*திரு செ.மா.கணபதி*

பண்டைய நாளில் நாடு என்பது நாட்டின் ஒரு பாகத்தைக் குறிக்கும்; கூற்றம், கோட்டம் எனவும் குறிப்பர். அதன் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக அமைந்த சபையையும் குறிக்கும். ஒரு வட்டாரமும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த, முறைப்படி ஒன்றாக இணைக்கப்பட்ட சார்புரிமை உடையவர்களின் கூட்டமே, பண்டைநாளில் நாடு என அழைக்கப்பட்டது. நிலவுடைமை சார்ந்த குடியேற்றங்களான, வெள்ளான்வகைக் கிராமங்களின் தொகுப்பே நாடு எனப்படும். இந்த நாடு என்ற நிர்வாகப் பிரிவின் எல்லைகளை வரையறுத்துக் கூற இயலாது. ஆறுகள், நதிகள் போன்ற இயற்கை எல்லைகள் இந்த நிர்வாகப் பிரிவுகளுக்குக் கிடையாது. நீர்நிலைகளின் இருபுறங்களிலும், இந்த நாடுகள் அன்னாளில் அமைந்திருந்தன. இதன்மூலம், வேளாண்மையே நாடு என்ற நிர்வாகப் பிரிவின் முக்கியத் தொழில் என்பது புலனாகிறது. நாடு என்ற இந்த நிர்வாகப்பிரிவுகள், நிலவுடைமை சார்ந்த குடியேற்றத் தொகுதிகளாக இயற்கையாகவே அமையத் தொடங்கின. ஒவ்வொரு நாடும் ஒரு கணிசமான பரப்பளவினைக் கொண்ட, குறைந்தபட்சம் 40 கிராமங்களைக் கொண்ட நிர்வாகப் பிரிவாகத் திகழ்ந்தது. பண்டைநாளில், பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டிலும், நாடு என்னும் இத்தகு நிர்வாகப்பிரிவுகள் இருந்து வந்துள்ளன.

நெற்சுரம் என்பதை நெச்சுரம், நேச்சுரம் எனவும், நெச்சுரநாடு, நேச்சுரநாடு எனவும் வரலாற்று ஆய்வாளர்கள் அழைத்து வருகின்றனர். கழுகுமலையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் சாசனங்கள், நெச்சுரம், நெற்சுரம் எனவும், நெச்சுரநாடு, நெற்சுரநாடு எனவும் குறிப்பிடுகின்றன. எனவே, நெற்சுரம், நெற்சுரநாடு என்பதே சரியான பெயர்களாகும். நெல்+சுரம்=நெற்சுரம்; நெல்வயல்கள் மலிந்த வயற்காடுகள்; எனவே, வேளாண்மக்கள் குடி இருக்கின்ற,

வெள்ளான்வகைக் கிராமங்களின் தொகுப்பினைக் கொண்ட வளமிக்க நெல்வயல்கள் மலிந்த நிர்வாகப்பிரிவே, நெற்சுரநாடு எனப்பட்டது.

புதிய தூத்துக்குடி மாவட்டம், கோயிற்பட்டி வட்டத்தில், கோயிற்பட்டி-சங்கரன்கோயில் நெடுஞ்சாலையில், கோயிற்பட்டி, சங்கரன் கோயில் ஆகிய இரு நகரங்கட்கும் மத்தியில், கோயிற்பட்டியிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலும், சங்கரன்கோயிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலும் கழுகுமலை என்னும் பேரூர் அமைந்துள்ளது. பண்டைநாளில், இப்பேரூர் நெற்சுரம் என்னும் பெயரில் சிறந்த சமணத்தலமாகத் திகழ்ந்தது. இக்கழுகுமலைப் பேரூரும் இதனைச் சுற்றியுள்ள பல கிராமங்களும் சேர்ந்த நிர்வாகப்பகுதி, பண்டைநாளில் நெற்சுரநாடு என அழைக்கப்பட்டது. பண்டைய நெற்சுரநாட்டின் தலைமையிடமாக, பண்டைய நெற்சுரமாகிய இன்றையக் கழுகுமலைப் பேரூரே இருந்து வந்துள்ளது. கழுகுமலைப் பேரூரும், இப்பேரூரைச் சுற்றியுள்ள, புதிய தூத்துக்குடி மாவட்டம், கோயிற்பட்டி வட்டத்தைச் சேர்ந்த சில கிராமங்களும், புதிய நெல்லை மாவட்டம், சங்கரன் கோயில் வட்டத்தைச் சேர்ந்த சில கிராமங்களும் சேர்ந்ததே பண்டைய நெற்சுர நாடு என்னும் நிர்வாகப்பிரிவு. கயத்தாறு (கோயிற்பட்டி வட்டம்) க்கு வடக்கே, காரிச்சாத்தானு (சங்கரன்கோயில் வட்டம்) க்குத் தெற்கே, கோயிற்பட்டிக்கு மேற்கே, சங்கரன்கோயிலுக்கு கிழக்கே, நான்கு ஊர்களுக்கு இடைப்பட்ட சில கிராமங்களின் தொகுப்பே பண்டைய நெற்சுரநாடு எனலாம். பண்டைய நெற்சுரநாட்டின் வடக்கில், வெண்பைக்குடி நாடும், தெற்கில் ஆசூர்நாடும், கிழக்கில் முதுகுடி நாடும், மேற்கில் கோட்டூர்நாடும் எல்லைகளாகத் திகழ்ந்தன. பண்டைய நெற்சுர நாட்டைச் சேர்ந்த ஊர்கள், திருக்கோயில்கள், இயற்கைவளம், நீர்வளம், நிலவளம், மக்கள், நிர்வாக அமைப்புகள் மற்றும் அதிகாரிகள், ஆட்சிபுரிந்த ஆளுநர்கள், குறுநிலத்தலைவர்கள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமெனலாம்.

பாண்டியநாடு, முற்காலப் பாண்டியராட்சியில் (கி.பி.550-990), பாண்டியநாடு, பாண்டிமண்டலம் எனவும், சோழர் ஆட்சியில்,

கி.பி.991 முதல் கி.பி.1012 வரை, இராஜராஜ வளநாடு எனவும், கி.பி.1013 முதல் கி.பி. 1022 வரை, இராஜராஜ மண்டலம் எனவும் சோழ பாண்டியராட்சியில், கி.பி. 1023 முதல், இராஜராஜப்பாண்டி நாடு எனவும் பிற்காலப்பாண்டியராட்சியில் பாண்டி மண்டலம் எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இதேபோல், பண்டைய நெற்சுரநாடும் நெற்சுரமும் முற்காலப்பாண்டியராட்சியில் பாண்டிநாட்டு அல்லது பாண்டி மண்டலத்து நெற்சுரநாட்டு நெற்சுரம் எனவும், சோழர் ஆட்சியில் கி.பி.991 முதல் கி.பி.1012 வரை, இராஜராஜவளநாட்டு நெற்சுரநாட்டு நெற்சுரம் எனவும், கி.பி.1013 முதல் கி.பி. 1022 வரை, இராஜராஜமண்டலத்து நெற்சுர நாட்டு நெற்சுரம் எனவும், அழைக்கப்பட்டிருக்கலாம். சோழ பாண்டியராட்சியில், கி.பி.1023ல் இராஜராஜப்பாண்டிநாட்டு முடி கொண்ட சோழ வளநாட்டு நெற்சுரநாட்டு நெற்சுரம் எனவும், பிற்காலப் பாண்டியராட்சியில், பாண்டி மண்டலத்து நெற்சுரநாட்டு நெற்சுரம் எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

**ஊர்கள்**

பண்டைய நெற்சுரநாட்டில், பள்ளிச் சந்த ஊர்கள், தேவதான ஊர்கள், வெள்ளான்வகை ஊர்கள் போன்ற பல்வேறு வகைக் கிராமங்கள் இருந்தன. சமணர் பௌத்தர் கோயில்களுக்காக வரியில்லாமல் விடப்பெற்ற நிலம் அல்லது கிராமம் பள்ளிச்சந்தம் எனப்பட்டது. முற்காலப் பாண்டியராட்சியின் போது சமணர் கோயில்களுக்கு வரியில்லாமல் விடப்பெற்ற திருநெற்சுரம், பெருநெற்சுரம், இளநெற்சுரம், தாதிநெற்சுரம், குழுவாணைநல்லூர் போன்ற பள்ளிச்சந்த ஊர்கள் நெற்சுரநாட்டில் இருந்தன.

கழுகுமலை, கழுகுமலைக்கு அருகிலுள்ள பழங்கோட்டை கோட்டைக்கழுகுமலை போன்ற ஊர்கள், திருநெற்சுரம், பெருநெற்சுரம், இளநெற்சுரம் எனவும், இன்றைய இலட்சிமியாபுரம் (கழுகுமலைக்கு வடபுறம் உள்ள ஊர்) திருவிருப்பூர் எனவும், இன்றைய வானரமுட்டி, ஊற்றத்தூர் எனவும், இன்றைய சாயமலைக்கு அருகிலுள்ள சிவன்கோயிலும் அதனைச் சுற்றியிருந்த, அழிந்துபோன குடியிருப்புப் பகுதிகளும் நென்மலி எனவும், கழுகுமலைக்குத் தெற்கேயுள்ள ஓலைக்குளம்

என்ற சிறிய கிராமம் ஓலைக்குளம் என்ற அதே பெயரிலும் பண்டை நாளில் அழைக்கப்பட்டு வந்துள்ளன.

நெற்சுரநாட்டுத் திருநெற்சுரம், இராஜராஜப்பாண்டிநாட்டு, முடிகொண்ட சோழவளநாட்டு, நெற்சுரநாட்டுப் பெருநெற்சுரம் எனவும், பெருநெற்சுரத்துப் பவித்ரமாணிக்கபுரம் எனவும், நெற்சுரநாட்டு ஓலைக்குளம் எனவும், பாண்டி மண்டலத்து நெற்சுரநாட்டு ஊற்றத்தூரான சுந்தரபாண்டிய நல்லூர் எனவும், சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியநல்லூர் எனவும், நெற்சுரநாட்டு நென்மலியான குலசேகரநல்லூர் எனவும் சாசனங்கள் இவ்வூர்களிற்சிலவற்றை அழைக்கின்றன.

## திருக்கோயில்கள்

பண்டைய நெற்சுரநாட்டில் பல்வேறு சமயத்தைச் சார்ந்த திருக்கோயில்களும் இடம் பெற்றிருந்தன. முற்காலப் பாண்டியராட்சியில், திருநெற்சுரத்தில் திருமலைத்தேவர், திருமலைமேற்படாரர், அரைமலை ஆழ்வார் மற்றும் நகரத்தான் செய்வித்ததேவர் போன்ற சமணசமயக் கோயில்களும், திருவிருப்பூரில் விமலோசனன் திருக்கோயில் என்ற சைவ சமயக்கோவிலும் எழுந்தருளியிருந்தன. சோழபாண்டியராட்சியில், பெருநெற்சுரத்து பவித்ரமாணிக்கபுரத்தில், உய்யக்கொண்டான் திருக்கோயில் போன்ற சைவ சமயக்கோயில் எழுந்தருளியிருந்தது. பிற்காலப் பாண்டியராட்சியில், நெற்சுரத்தில் ஜம்புலிங்கேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருமுருகன் திருக்கோயில், பவித்ரமாணிக்கபுரத்தில் திருமேற்கோவில், நாயனார் திருக்கோயில், ஊற்றத்தூரில் திருவிராமேச்சுரமுடைய நாயனார் திருக்கோயில், நென்மலியில் உமையொருபாகீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில் மற்றும் குலசேகரீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில் போன்ற சைவசமயத் திருக்கோயில்களும் பவித்ர-மாணிக்கபுரத்தில் திருவுடைவிண்ணகர் எம்பெருமான் திருக்கோயில் மற்றும் நென்மலியில் அவனிமுழுதுடையாள் விண்ணகர் எம்பெருமான் திருக்கோயில் போன்ற வைணவ சமயத் திருக்கோயில்களும் எழுந்தருளியிருந்தன.

ஸ்ரீதிருநெற்சுரத்துத் திருமலை மேற்படாரர் எனவும், ஸ்ரீ திருநெற்சுரத்து அரைமலை ஆழ்வார் எனவும், நெற்சுர நாட்டுத்திருநெற்சுரத்து திருமலைத்தேவர் எனவும், திருச்சுழியலில் இருக்கின்ற பிராமணன்மாணி சங்கரநாராயணனாயின நகரத்தான் செய்வித்த தேவர் எனவும் சமணத் திருக்கோயில்களைச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. நெற்சுரநாட்டுப் பெருநெற்சுரத்து பவித்ரமாணிக்கபுரத்து உய்யக்கொண்டான் எனவும், வேகவெள்விடையூர்தி விமலோசனன் மகிழ்ந்துறையும் வாழியவான் திருவிருப்பூர் எனவும், ஊற்றத்தூர் நாயனார் திருவிராமேச்சுரமுடைய நாயனார் எனவும், உடையார் திருவிராமீசுரமுடையநாயனார் எனவும், நெற்சுரநாட்டு நென்மலியான குலசேகரநல்லூர் உமையொருபாகீஸ்வரமுடையநாயனார், மற்றும் குலசேகரீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில் எனவும் சைவ சமயத் திருக்கோயில்களைச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

## சமணக்கல்வி நிறுவனம்

பண்டைய நெற்சுரநாட்டின் தலைமையிடமான நெற்சுரத்தில், குழுவாணை நல்லூர் என்ற பெயர் கொண்ட மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கிப்பயிலும் சமணக்கல்வி நிறுவனம் ஒன்று இருந்தது. பண்டையத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சமண சமயத்தைச் சேர்ந்த இளந்துறவியர்கள் இங்கு வந்து தங்கி, சமண, சமய நெறியைப் பயின்று சென்றுள்ளனர் இக்கல்வி நிறுவனம், முற்காலப்பாண்டியராட்சியில் குணசாகரர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இவர், யாப்பருங்காலம், யாப்பருங்கலக்காரிகை போன்ற தமிழ் இலக்கண நூல்களை இற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இயற்கை வளம்

பண்டைய நெற்சுர நாடு, மண்வளம், பொன்வளம் மற்றும் இயற்கை வளம் போன்ற எல்லா வளங்களையும் பெற்றுத் திகழ்ந்தது. வளமிக்க மருத நில வயல்கள், நெல்வயல்களை வேலியாகக் கொண்ட இளநெற்சுரம் என்பதை, வளமிக்க மருதவேலி இளநெற்சுரம் எனவும், ஆனையச்சு, நல்லானையச்சு,

பழமுதல்யானையச்சு, பழஞ்சலாகையச்சு, ஸ்ரீயக்கி பழஞ்சலகையானையச்சு மற்றும் கழஞ்சு போன்ற தங்க நாணயங்கள் மிகுதியாகப் புழக்கத்திலிருந்த நெற்சுரநாடு, நீதிநெறிதவறாத காவலனைக் கொண்ட நெற்சுர நாடு என்பதை, அச்சுறுவளம் அணவிவேந்தன் நெற்சுரநாடு எனவும், நெற்சுரநாடு இயற்கை எழில் கொஞ்சும் நாடு என்பதை, எழிலமை நெற்சுரநாடு எனவும், நெற்சுரநாடு குறித்தும் அதிலுள்ள இளநெற்சுரம் குறித்தும் தளவாய்புரச் செப்பேடு குறிப்பிடுகிறது. நெற்சுரநாட்டைச் சேர்ந்த வளமிக்க வயல்கள், நிலங்கள் போன்றவை பொன்மயமான செம்மண் பூமி என்பதை நெடுங்கிணற்றுப் பொற்செவ்வை என்று சாயமலைக்கு அருகிலுள்ள சிவன்கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவை தவிர, வன் கள்ளி முரம்புகள், உயர் பரம்பீடுகள், நீர்கோள்கள், நீர்க்குமிழிகள், பாங்கமைந்த பாறைகள், படுகால்கள், வன்பொருப்புகள், பெருவழிகள் போன்ற பல இயற்கையமைப்புகளும் இடம் பெற்றிருந்தன. இங்ஙனம், நெற்சுரநாட்டின் இயற்கை வளங்கள் சாசனங்களில் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

## நீர்வளமும் நிலவளமும்

நீரின்றி அமையாது உலகு 2034 ஆண்டுகளுக்குப் பிறகும் வள்ளுவத்தின் வார்த்தைகள் சத்தியவேதமாய் நின்று இவ்வுலகை உலுக்குகின்றன. இதன் சாராம்சத்தை நம் முன்னோர்கள் முழுமையாகப் புரிந்து கொண்டதன் விளைவுதான் கோயில்தோறும் குளங்கள் உள்ளன. கண்மாய், கால்வாய், வாய்க்கால், குட்டைகள், ஏரிகள், குளங்கள், ஊருணி, கேணி எனப் பல்வேறு நீர்த்தேக்கங்களைத் தங்களது வாழ்விடங்களைச் சுற்றி அமைத்துக் கொண்டு வளவாழ்வு வாழ்ந்தனர். பண்டைய நெற்சுரநாடு, ஆறு, ஏரி, குளம், குட்டை, குழி, படுகால், கிணறு போன்ற நீர் நிலைகளையும், பொன் விளைகின்ற மண்வளமிக்க நிலங்களையும் கொண்டு திகழ்ந்தது. பண்டை நாளில், வெள்ளாறு என்ற ஆறு நெற்சுரநாட்டில் உற்பத்தியாகி அருகிருந்த ஆசூர் நாட்டின் வழியாகச் சென்று கடலில் கலந்த செய்தி, திருவிருப்பூர் மூரிநின்று தென்கிழக்கு நோக்கிப் போயின வெள்ளாறு என்று

தளவாய்புரச் செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிருப்பூர், நெற்சுரநாட்டைச் சேர்ந்த ஊர்; இன்று இலட்சுமியாபுரம் என்ற பெயரில், கழுகுமலைக்கு வடபுறம் இருக்கிறது. தவிர, திருநெற்சுரத்து வீரநாரணஏரி, பெருநெற்சுரத்து சாத்தனேரி, நென்மலியைச் சேர்ந்த கொற்றியேரி மற்றும் குடிநடையேரி போன்ற ஏரிகளும், ஊற்றத்தூர் திருவிராமேச்சுரமுடையநாயனார் தேவதான ஊருக்குச் சொந்தமான குளம், செங்குளம் ஊரைச்சேர்ந்த செங்குளம், கோட்டூரைச் சேர்ந்த கோட்டூர்க்குளம், மணற்குளம், மருதங்குளம், ஓலைக்குளம் ஊரைச்சேர்ந்த ஓலைக்குளம் மற்றும் நடையாட்டிகுளம் போன்ற குளங்களும், சமணத்துறவிகட்கு அன்னதானத்திற்காக வெட்டுவிக்கப்பட்ட இருகிணறுகள் திருநெற்சுரத்தில் கன்னிக்குச்சு வயலுக்கும், சாத்தனேரிக்கும் இடையில் இருந்த கிணறு, பெருநெற்சுரத்துப் பவித்ரமாணிக்கபுரத்தைச் சேர்ந்த கிணறு செங்குளம் ஊரிலுள்ள கிணறு, நென்மலியிருந்த நெடுங்கிணறு மற்றும் படைப்பரைப்பற்றுக் கிணறு போன்ற கிணறுகளும், பலநீர்க்கோள்கள், பலநீர்க்குழிகள் போன்ற நீர்நிலைகளும் நெற்சுரநாட்டில் இருந்தன.

தவிர, பண்டைய நெற்சுரநாட்டில், சிவன்கோயில்களுக்கு திருநாமத்துக்காணியாக விடப்பட்ட நிலங்கள், வைணவக் கோயில்களுக்கு திருவிடையாட்டமாக விடப்பட்ட நிலங்கள், சமணக்கோயில்களுக்கு பள்ளிச் சந்தமாக விடப்பட்ட நிலங்கள், போரில் வீழ்ந்த வீரருடைய வழியினர்க்கு இரத்தமானியமாக விடப்பட்ட நிலங்கள், திருக்கோயில் திருப்பணி செய்வார்க்கு காணியாக விடப்பட்ட நிலங்கள், சோழநாட்டுக்காரர்களுக்குச் சொந்தமான, திருநெற்சுரம் மற்றும் பெருநெற்சுரத்தைச் சேர்ந்த நிலங்கள் வளமிக்க நெல்வயல்கள், செவல்நிலம், கரிசல்நிலம் போன்ற பல்வேறு வகைப்பட்ட பண்படுத்தப்பட்ட நிலங்கள் பண்டைய நெற்சுரநாட்டில் இடம் பெற்றிருந்தன.

அருவியூர்க்கோட்டைப்போரில் வீரமரணம் எய்திய பூந்தண்மலி (சென்னைக்கு அருகிலுள்ள பூவிருந்தவல்லி) (தொண்டை மண்டலம்) வினையன் தொழுகூரன் மற்றும் பேரெயிற்குடி (வெண்புநாடு) சாத்தன்நக்கன் ஆகிய

இருவீரர்களது சந்ததியினருக்கு எட்டி மன்னனால் இரத்தமானியமாக விடப்பட்ட இருபதின்கழஞ்சு பொன்பெறும் பூமி; சோழநாட்டைச் சேர்ந்த தர்மவித்தன் மற்றும் திருமால் தாசனுக்குச் சொந்தமான திருநெற்சுரத்துநிலம்; திருநெற்சுரத்திலுள்ள, திருமால் உறவாறணை நிலம், சீடப்படாரர் நிலம், உத்தம சீலன் நிலம், வரசுந்தரி நிலம், கங்கவீரன் நிலம் மற்றும் நாட்டுச் செருநிலம்; இந்த நிலங்களை எல்லைகளாகக் கொண்ட, திருநெற்சுரத்திலுள்ள சமணத்துறவியர்க்கு ஆகாரதானத்திற்காக தர்மவித்தன் மற்றும் திருமால்தாசன் ஆகிய இருவரால் அறச்சாலாபோகமாக வழங்கப்பட்ட பள்ளிச்சந்த நிலங்கள்; நெற்சுரநாட்டுப் பெருங்கொல்லன் சுந்தரபட்டனுக்கு காணியாட்சியாக விடப்படட கால்மாகரிசல்நிலம், திருநெற்சுரத்துப் பெருங்கோவேளான் தென்னவனுக்கு காணியாட்சியாக விடப்பட்ட கால்மா கரிசல்நிலம்; இளநெற்சுரத்தைச் சுற்றி வேலிபோல் அமைந்திருந்த வளமிக்க மருதநில வயல்கள்; ஓலைக்குளம், நடையாட்டிகுளம் மற்றும் குடிநடையேரி போன்ற ஏரி குளங்களுக்குப் பாத்தியப்பட்ட நிலங்கள்.

பெருநெற்சுரத்தைச் சேர்ந்த கன்னிக்குச்சிவயல்; சோழமண்டலத்து இராஜராஜ வளநாட்டு சென்னிமங்கலக் கூற்றத்து ராஜசூளாமணிபுரத்து வியாபாரி களியணம்பலத்தால் விலைக்கு வாங்கப்பட்ட பெருநெற்சுரத்து கன்னிக்குச்சி வயலுக்கும் சாத்தனேரிக்கு இடைப்பட்ட மூன்று மாநிலம்; மற்றும் பவித்ரமாணிக்கப்புரத்துக்குப் பாத்தியப்பட்ட மூன்று மாநிலம் ஆகிய ஆறுமாநிலம்.

ஊற்றத்தூர் திரவிராமேச்சுரமுடைய நாயனார், நென்மலி உமையொரு பாகீஸ்வரமுடைய நாயனார் மற்றும் குலசேகரீஸ்வரமுடையநாயனார் ஆகிய திருக்கோயில்களுக்குத் திருநாமத்துக்காணியாக விடப்பட்ட நிலங்கள்; நென்மலி அவனிமுழுதுடையாள் விண்ணகர் எம்பெருமான் மற்றும் பவித்ரமாணிக்கபுரத்து திருவுடை விண்ணகர் எம்பெருமான் ஆகிய திருக்கோயில்களுக்கு திருவிடையாட்டமாக விடப்பட்ட நிலங்கள்; நென்மலியில் உள்ள கொக்குமடைப்போக்கு,

குசவன்மடைவிருத்தி, கொக்கு குசவன் வயல்கள், படைப்பரைப்பற்று, நெடுங்கிணற்றுப்பற்று, பிடாரிவளாகம், மூவடையடக்கி நிலம், சூலக்காடு, அன்னவினோதகன் நிலம், சோழகங்கதேவன் நிலம், குசவன்நிலம் போன்ற நிலங்கள் ஊற்றத்தூருக்கு அருகேயுள்ள கொன்றைக்குளம் மற்றும் செங்குளம், நென்மலிக்கு அருகிலுள்ள கொற்றியேரி, கோட்டூர்க்குளம், மணற்குளம், மருதங்குளம் ஆகிய நீர்நிலைகளுக்குப் பாத்தியப்பட்ட நெல்வயல்கள்

இங்ஙனம், திருநெற்சுரம், பெருநெற்சுரம், இளநெற்சுரம், ஊற்றத்தூர், நென்மலி, ஓலைக்குளம், மருதங்குளம், செங்குளம், போன்ற ஊர்களுக்குச் சொந்தமான நீர்நிலைகளைப் பற்றிய குறிப்புகளும், நிலங்களைப் பற்றிய குறிப்புகளும் கல்வெட்டு மற்றும் செப்பேட்டுச் சாசனங்களால் அறியக்கிடக்கின்றன. இங்ஙனம், பண்டைய நெற்சுரநாட்டின் வளமிக்க வயல்களும் நிலங்களம் ஏராளமாக இருந்துள்ளன.

## மக்கள்

கழுகுமலை கி.பி.8 முதல் 10ஆம் நூற்றாண்டு வரை சிறந்த சமணத்தலமாகத் திகழ்ந்துள்ளது. எனவே கழுகுமலையைத் தலைமையிடமாகக் கொண்ட பண்டைய நெற்சுரநாட்டில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலானோர் சமண சமயத்தவராகத்தான் இருந்திருக்க வேண்டும். இதே காலகட்டத்தில், வெட்டுவான்கோயில் என்ற சைவசமயக்கோயிலும் தோன்றியுள்ளது. எனவே, சைவ சமயத்தவரும் இந்நாட்டில் வாழ்ந்திருக்கலாம். தவிர, இங்குள்ள கல்வெட்டுச் சாசனங்க்ளை ஆய்கின்ற போது, 'பண்டைய நெற்சுரநாட்டில், நால்வகை வருணத்தாரும் வேளாளர், இடையர், குயவர், கொல்லர், படைவீரர் போன்ற பல்தொழில்புரிவோரும் வாழ்ந்திருந்ததாகத் தெரியவருகிறது.

முற்காலப்பாண்டியர் காலத்தில், சுந்தரதட்டன் என்ற கோயிற் திருப்பணிகளைச் செய்யும் ஒருவன் இருந்துள்ளான. இவன் நெற்சுரநாட்டுப் பெருங்கொல்லன் என்ற பதவியை வகித்து வந்துள்ளான். இவனுக்கு கால்மா கரிசல் நிலம் காணியாக

வழங்கப்பட்டுள்ளது. அடுத்து, பிற்காலப் பாண்டியர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சிவன் கோயிலின் நிர்வாகமும் பராமரிப்பும் சிவப்பிராமணர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், சிவப்பிராமணர்கள் நெற்சுரநாட்டில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்பது தெரியவருகிறது. கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, சாயமலை சிவன்கோயில் கல்வெட்டொன்றில், நென்மலி ஊர்ச்சபையார்களில் சிலர், புவனியபதியான், பரிமேலழகியான், சுந்தரப்பெருமாள், ஆலைவாயகந்தான், அபிசேகப்பெருமாள் போன்ற பெயர்களையுடையவர்களாகத் திகழ்கின்றனர். மேலும், பல்லவதரையன், சிறியபன்மன், செப்பியதலையான் போன்ற சிறப்பு விருதுப் பெயர்களையுடையவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

பண்டைய நெற்சுரநாட்டின் குறுநிலத்தலைவர்களாக, படைத்தலைவர்கள், பலர் இருந்துள்ளனர். முற்காலப் பாண்டியராட்சியின் எட்டி என்ற படைத்தலைவனும், பிற்காலப்பாண்டியராட்சியின் போது இராசநாராயண தேவன் என்ற குறுநிலத்தலைவனும், மதுரை நாயக்கர் ஆட்சியின் போதும் வெள்ளையர் ஆட்சியின் போதும் எட்டப்பநாயக்கர் என்ற பாளையக்காரர் பரம்பரையும் இப்பகுதியை ஆளுகைபுரிந்து வந்துள்ளனர். முற்காலப்பாண்டியர்காலத்தில், படைவீரர்கள்பலர் அரண்மனைப் பணியாளர்களாகவும், சமணத்தலங்களின் காவலர்களாகவும் பணிபுரிந்துள்ளனர். தொண்டை நாட்டுப் பூந்தண்மலி (பூவிருந்தவல்லி) யைச் சேர்ந்த வினையன் தொழுசூரனும், வெண்புநாட்டுப் பேரெயிற்குடி சாத்தன் நக்கன் போன்றவர்கள் போர்ப் பணியோடு எட்டி மன்னனின் அரண்மனைச் சேவர்களாகவும் பணிபுரிந்துள்ளனர். நெற்சுரநாட்டில் இருந்த சமணத் தலங்களையும் அவைகளுக்கு வழங்கப்படும் தானங்களையும் கண்காணிக்கும் காவலர்களாக திருமலைவீரன், பராந்தகவீரன் போன்ற வீரர்கள் பணிபுரிந்துள்ளனர்.

(தொடரும்)

பதிப்பாசிரியர்.

## பேராசிரியர். இரா. சதாசிவம்

### ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
திரு. ந. வாசுகிராசா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116